PUBLIC LIBRARY
JAFFNA
PUBLIC LIBRARY
JAFFNA

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 137
இதழ் : 11
பக்கங்கள் : 08
திகதி : 15.06.2014
விலை : 15.00

# பாலஸ்தீன அரசுத் தலைவரும், இஸ்ரேல் அரசுத் தலைவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் அமைதிக்காகச் செபித்தனர்

## வத்திக்கானில் நிகழ்ந்த ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு

புனித பூமியில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கத்தில் பாலஸ்தீனிய அரசுத்தலைவர் மஹ்முத் அப்பாஸ் அவர்களும், இஸ்ரேல் அரசுத்தலைவர் ஹிமோன் பெரெஸ் அவர்களும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன், இணைந்து வத்திக்கானில் தூய ஆவியின் பெருவிழாவில் கூடிச் செபித்தனர்.

வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்துக்கு பெந்தக்கோஸ்தே தினம் அன்று மாலை 6.30 மணிக்கு வருகை தந்த இவ்விரு தலைவர்களையும் வரவேற்ற திருத்தந்தை, வத்திக்கான் தோட்டத்தில் இச்செப வழிபாட்டுக்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்துக்கு இவ்விருவருடன் சென்றார். இவர்களுடன் கான்ஸ்ட்டாண்டிநோபிள் கிறிஸ்தவ ஒன்றிப்பு முதுபெரும் தந்தை முதலாம் பர்த்த லோமேயோ அவர்களும் கூடச் சென்றிருந்தார்.

"அமைதியைக் கட்டியெழுப்புவது கடினம் தான்; ஆனால, அமைதியின்றி வாழ்வது பெரும கொடுமை" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் அண்மைய புனிதப் பூமிப் பயணத்தில் கூறியதை ஏற்று இத்தலைவர்கள் அமைதிக்கான இச்செப வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

படைப்புக்காக இறைவனைப் புகழ்தல், மன்னிப்பை இறைஞ்சுதல், அமைதிக்காகச் செபித்தல் ஆகிய மூன்று நிலைகளில், யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மரபுகளின்படி இந்தச் செபவழிபாடு நடைபெற்றது.

இந்தச் செப வழிபாடு அரசியல் நிகழ்வாக நோக்கப்படக் கூடாது என்று வத்திக்கான் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பாலஸ்தீனம், இஸ்ரேல் ஆகிய பகுதிகளிலுள்ள பல்வேறு சமயக் குழுக்களின் ஏறக்குறைய இருபது பிரதிநிதிகளும், இன்னும் பிற திருஅவைப் பிரமுகர்களும் இவ்வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

திருப்பீடப் பேச்சாளர் இயேசு சபை அருட்பணியாளர் பெதரிக்கோ லொம்பார்தி அவர்களும், புனித பூமிக் காவலர் பிரான்சிஸ்கன் அருட்பணியாளர் பிசபல்லா அவர்களும் இந்த நிகழ்வு குறித்து பத்திரிகையாளர்களிடம் கடந்த வாரம் விளக்கினர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இம்முயற்சி வெற்றியடைய, பெத்லகேம் உட்பட உலகின் பல பாகங்களில் செப வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.



**"போர் புரிவதற்குத் தேவைப்படும் துணிச்சலை விட அமைதியை உருவாக்க அதிகத் துணிவு தேவை" - திருத்தந்தை பிரான்சிஸ் -**

## யாழ் அமதிகளின் புதிய மாகாண முதல்வர்



அமலமரித்தியாகிகள் சபையின் யாழ் மாகாணத்தின் புதிய முதல்வராக அருள்முனைவர் எஸ்எட்வின் வசந்தராஜா அடிகள் நியமனம் பெற்றுள்ளார். கடந்த காலங்களில் யாழ் மாகாணத் முதல்வராக பணியாற்றிய அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளாரின் பணிக் காலம் நிறைவு பெறவே புதிய முதல்வரை அமதிகளின் சிரேஸ்ட முதல்வர் அருட்பணி. லூயிஸ் லவுகன் அவர்கள் நியமித்துள்ளார். அருள்முனைவர் எட்வின் வசந்தராஜா அடிகளார் தமது கலாநிதிப் பட்டப் படிப்பை பிலிப்பைன்சில் நிறைவு செய்து கொண்டு அண்மையில் தாயகம் திரும்பி தமது பணிப் பொறுப்பை ஏற்றுள்ளார். புதிய மாகாண முதல்வரை யாழ் ஆயர், குருமுதல்வர், குருக்கள், பொதுநிலையினருடன் இணைந்து பாதுகாவலன் வாழ்த்தி மகிழ்கின்றது.

## மறைமாவட்டக் குருவாக அருட்பொழிவு


யாழ் மறைமாவட்டத்துக்கு இவ்வாண்டும் மேலும் ஓர் புதிய குருவாக இறைவன் தருகிறார். யாழ் குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருச்சபையைச் சார்ந்த அருட்சகோதரன் அன்ரனி மைக்டொனால்ட் அவர்கள் எதிர்வரும் யூன் 26ம் திகதி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் யாழ் பேராலயத்தில் காலை 9.30 மணிக்கு யாழ் மறைமாவட்டக் குருவாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளார்.

குருநகர் திருச்சபையைச் சேர்ந்த தோமஸ் அன்ரனி கிறிசாந்து பதல்டா தம்பதியினரின் இரண்டாவது மகனாக இவர் தமது ஆரம்பக்காலக் கல்வியை சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையிலும் உயர்நிலைக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

1998ம் ஆண்டு புனித மடுத்தீனார் குருமடத்தில் இணைந்த இவர் தமது மெய்யியல் கல்வியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் இறையியல் கல்வியை உரோமாபுரி Maria Mater Ecclesiae குருமடத்திலும் பெற்றுக் கொண்டார். திருத்தொண்டராக பருத்தித்துறை தோமையார், யாழ் மரியன்னை பேராலய பங்குகளிலும் தமது பணிப்பயிற்சியை மேற் கொண்டார். குருவாக திரு நிலைப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் யூன் 28ம் திகதி சனிக்கிழமை புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 9.30 மணிக்கு தமது முதல் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். புதிய குரு அருட்பணி. அன்ரனி மைக் டொனால்ட் அவர்களின் குருத்துவப் பணி சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் வாழ்த்தி மகிழ்கின்றது.



## குருத்துவப் பணிவாழ்வில் வெள்ளிவிழாக்காணும் எம் குருக்களை வாழ்த்துகின்றோம்



அருட்பணி
J.B. அன்ரனிதாஸ்

யாழ் மறைமாவட்ட நிதி முகாமையாளராகப் பணியாற்றுகின்றார்.



அருட்பணி
A.F. பெனற்

ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக மையத்தின் இயக்குநராகப் பணியாற்றுகின்றார்.



அருட்பணி
S. இயூஜின் பிரான்சிஸ்

இளவாலை மறைக் கோட்ட முதல்வராகவும் பண்டத்தரிப்பு பங்குத் தந்தையாகவும் பணியாற்றுகின்றார்.




அருட்பணி
C.J. அன்ரனி பாலா

அச்சுவேலி பங்குத்தந்தையாகப் பணியாற்றுகின்றார்.



அருட்பணி
T.A. தவராஜ சிங்கம்

கனடாவில் பணியாற்றுகின்றார்.



அருட்பணி
M. டேவிற்

அமெரிக்காவில் உயர் கல்வியை மேற்கொள்கின்றார்.

இன்பக் கானானாக
இவ்வுலகம் செழித்திட
இறைபணியாற்றிடும்
இன்னருள் குருக்களே!

திருச்சபை வானில்
வெள்ளியென பூத்திலங்கும்
உள்ளம் உவப்பெய்தும்
உன்[illegible]

வற்றாத நீரூற்றாய்
அருட்பணிகள் சுரந்திட
இறையருள் வேண்டி
இனிதே வாழ்த்துகின்றோம்.




— பாதுகாவலன் சமூகம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமது ஏண்ணும்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# சர்வதேச விசாரணையும் ஆட்சி மாற்றமும்

சர்வதேச விசாரணை பற்றிய பேச்சுக்களின் மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் பொதுத் தேர்தல் பற்றிய பேச்சுக்களும் உரையாடல்களும் தொடருகின்றன. அரசாங்கமும் அதன் அங்கத்துவக் கட்சிகளும் எதிர்க்கட்சியும் இந்தப் பேச்சுக்களைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. போர்க்குற்ற விசாரணை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் என்று அரசாங்கத்தின் மீது சர்வதேசம் அழுத்தம் கொடுப்பது எதிர்க்கட்சிகளுக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் தமிழ் மக்கள் நலன் சார்ந்து வருகின்ற விடயங்களில் எதிர்க்கட்சிகளும் குறிப்பாக ஐக்கிய தேசிய கட்சியும் பொருட்படுத்துவதில்லை.

ஆட்சி மாற்றம் தொடர்பாக சர்வதேச நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் தற்போது வெளியான தேர்தல் அறிவிப்புகள் வாய்ப்பாக அமைந்துள்ளன. இதனை எதிர்க்கட்சிகளும் சாதகமாகப் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது. தேர்தல் பற்றிய அறிவிப்புகள் வெளியானதும் எதிர்கட்சிகள் அரசாங்கத்தைக் கவிழ்க்க கூறுகின்ற பொய்ப்பிரச்சாரங்கள் என்பது வேறு. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் இனப்பிரச்சினை எல்லாம் சரியாகிவிடும் என சர்வதேச மட்டத்தில் கூறப்படுகின்ற பொய்யான வாக்குறுதிகள், நம்பிக்கைகள் தமிழ் மக்களுக்கு ஆபத்தானவை என்பது தான் தமிழ் அரசியல் விமர்சகர்களின் நோக்காகவுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்தவரை எப்படியாகிலும் தான் ஜனாதிபதியாகிவிட வேண்டும் என்பதும் அதற்காக எந்த வாக்குறுதிகளையும் கொடுப்பதற்கும் அவர் தயாராகவே இருக்கின்றார்.

சர்வதேச விசாரணை என்பது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிடிக்காத ஒன்றுதான். ஆனால் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளை சமாளிப்பதற்கு வேறு கதையும், சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர இன்னுமொரு கதையும் கூறுகின்ற பிரச்சார உத்திகளை ரணில் விக்கிரமசிங்க தற்போது கையாளுகின்றார். அது இரண்டு வகைப்படுகின்றது. சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஆட்சிமாற்றம் குறித்த பேச்சுக்களுக்கும், மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிரான சர்வதேச கண்டனங்களை ஆதரிப்பதும் ஒரு வகை. சர்வதேச விசாரணைகளை அனுமதிப்பதன் மூலம் சர்வதேச அரங்கில் அரசாங்கம் படைகளைக் காட்டிக் கொடுப்பதாக சிங்கள மக்களுக்குக் கூறுவதன் மூலம் சிங்கள வாக்குகளைக் கவர முறபடுவது இரண்டாவது வகை.

ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு இரட்டைவேடம் போடுகின்றார் என்பது சர்வதேச நாடுகளுக்குத் தெரிந்த விடயம்தான் ஆனாலும் சிங்கள மக்களின் வாக்குகளைக் கவருவதற்காக அவர் கையாளும் இரண்டாவது வகை உத்தி அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளும் தேவைப்படுகின்றன. ஏனெனில் என்ன விலை கொடுத்தும் இந்த அரசாங்கத்தை பதவி கவிழத்துவிட வேண்டும் என்ற அவசரத் தேவை அமெரிக்காவுக்கு உண்டு.

அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகவும் சஜித் பிரேமதாசாவை பிரதமர் வேட்பாளராகவும் அனுமதிப்பதற்கு ஐக்கியதேசியக் கட்சிக்குள் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் பொதுவேட்பாளர் பற்றிய பேச்சுக்களும் கைவிடப்படக்கூடிய நிலை உண்டு. ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் நின்ற போது இந்த இணக்கத்துக்கான அதாவது சஜித் பிரேமதாசாவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக இணங்க வைக்கிற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக தகவல். எவ்வாறாயினும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் ஓரளவுக்கேனும் வெற்றி கொண்டுள்ளன என்பது தான் இங்கு முக்கியமானது. ஆட்சி மாற்றத்துக்காக முன்னர் கையாண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில் இந்த முயற்சி ஓரளவுக்கேனும் சாதகமான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

# உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கு பிரேசில் அரசு செலவிடும் தொகைக்கு ஆயர்கள் எதிர்ப்பு

பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கு அரசு அதிகத் தொகையைச் செலவிடுவது குறித்த தங்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர் அந்நாட்டு ஆயர்கள்.

கல்விக்கும், நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள வேளையில், உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டிக்கு அரசு பெருந்தொகையைச் செலவிடுவது குறித்துக் கேள்வி எழுப்பியுள்ளனர் ஆயர்கள்.

இந்த விடையாட்டுப் போட்டி நடக்கும் நாட்களில் இடம்பெறவுள்ள பாலியல் சார்ந்த குற்றங்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஆயர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இம்மாதம் 12 முதல் வருகின்ற ஜூலை 13 வரை பிரேசில் உலகக் கோப்பைக் கால்பந்துப் போட்டி நடைபெறும். ஏறக்குறைய எட்டு இலட்சம் இரசிகர்கள் வெளிநாடுகளிலிருந்து வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆப்கானிஸ்தானில் அருட்பணியாளர் பிரேம் குமார் அவர்கள் கடத்தப்பட்டுள்ளது தொடர்பாக மூன்று தலிபான்கள் கைது

ஆப்கானிஸ்தானில் தமிழக இயேசு சபை அருட்பணியாளர் அலெக்ஸிஸ் பிரேம் குமார் அவர்கள் கடத்தப்பட்டுள்ளது தொடர்பாக மூன்று தலிபான்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக, இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஜூன் 2ம்திகதி அன்று அடையாளம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ள அருட்பணியாளர் பிரேம் குமார் அவர்களை விடுவிக்கும் முயற்சியில், ஆப்கானிஸ்தான் எல்லா வழிகளிலும் முயற்சித்து வருகின்றது என்றும், நிலைமை மிகவும் சிக்கலாக இருப்பதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சகப் பேச்சாளர் கூறியதாக ஆசியச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

47 வயதான அருட்பணியாளர் பிரேம் குமார் அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் பணியாற்றி வருகிறார்.

2000மாம் ஆண்டு அருள் பணியாளராகத் திருநிலை பெற்ற பிரேம் குமார் அவர்கள், கொடைக்கானல் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்டோர், மற்றும் பழங்குடியினர் மத்தியில் பணி புரிந்தவர்.

கடந்த ஏழு ஆண்டுகளாக, இயேசு சபையினரால் நடத்தப்படும் புலம் பெயர்ந்தோர் பணி அமைப்பில் இணைந்து, இலங்கை மக்களுக்காகவும் JRS நிறுவனத்தின் ஊடாகவும் தற்போது ஆப்கானிஸ்தான் மக்களுக்காகவும் பணியாற்றி வருகிறார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்துவே முதலில் அன்பு செய்யப்பட வேண்டியவர் என்பதை அருட்பணியாளர்கள் ஒருபோதும் மறக்கக்கூடாது

**– திருத்தந்தை பிரான்சிஸ் –**

அருட்பணியாளர்கள் முதலில் மேய்ப்புப் பணியாளர்கள், இரண்டாவதாக, அவர்கள் வல்லுனர்கள் என்றும், கிறிஸ்துவே முதலில் அன்பு செய்யப்பட வேண்டியவர் என்பதை அருட்பணியாளர்கள் ஒருபோதும் மறக்கக் கூடாது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உங்களின் முதல் அன்பு எப்படி இருக்கின்றது? முதல் நாள்போன்று இன்றும் தொடர்ந்து அந்த அன்பு நீடிக்கிறதா? உங்கள் அன்பில் அவர்கள் மகிழ்வாக இருக்கின்றார்களா? அல்லது அவர்கள் உங்களைப் புறக்கணிக்கின்றார்களா? என்பன போன்று எல்லா இடங்களிலும் கேட்கப்படும் இந்தக் கேள்விகளை, தம்பதியர் போல் இல்லாமல், அருள்பணியாளர்களாக, ஆயர்களாக நாம் இயேசுவின் முன்னால் கேட்க வேண்டும் என்றும் கூறினார் திருத்தந்தை.

யோவானின் மகன் சீமோனே! நீ என்னை அன்பு செய்கிறாயா? என, பேதுருவிடம் ஒருநாள் இயேசு கேட்டது போல நம்மிடமும் இயேசு கேட்பார் என்று, வத்திக்கான் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் நிகழ்த்திய திருப்பலி மறையுரையில் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

யோவானின் மகன் சீமோனே! நீ என்னை அன்பு செய்கிறாயா? என, பேதுருவிடம் இயேசு மூன்று முறை கேட்ட நற்செய்திப் பகுதியை மையமாக வைத்து மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்தக் கேள்வியைக் கேட்ட பின்னர் இயேசு பேதுருவிடம், என்னைப் பின்தொடர் என்று கூறியதை வைத்தும் விளக்கினார்.

நாம் பாதையைத் தொலைத்தால் அல்லது அன்புக்குப் பதிலளிப்பது குறித்து தெரியாமல் இருந்தால், மேய்ப்பர்களாக எப்படி பதிலளிப்பது என்பதை நாம் அறியாமல் இருப்போம், நோயிலும், வாழ்வின் இக்கட்டான நேரங்களிலும் ஆண்டவர் கைவிடமாட்டார் என்ற உறுதியைக் கொண்டிருக்க மாட்டோம் என்றுரைத்த திருத்தந்தை, இயேசுவின் அடிச்சுவடுகளை நாம் பின்தொடர வேண்டும் என்றும் கூறினார்.

அருட்பணியாளர்களும், ஆயர்களும் தங்கள் முதல் அன்பைக் கண்டுகொள்ளவும், அதை நினைவில் கொள்ளவும் ஆண்டவர் அருள்பொழிவாராக என, தனது மறையுரையை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்கள், நோயிலும் செபத்தாலும் துன்பத்தாலும் திரு அவைக்குத் தொடர்ந்து பணி செய்தவர்கள், கர்தினால் சொதானோ பாராட்டு

இறைவனடி எய்தியுள்ள கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்கள், நோயினால் நீண்டகாலமாக வேதனை அனுபவித்தாலும், அவர் தனது செபத்தாலும் துன்பத்தாலும் திரு அவைக்குத் தொடர்ந்து பணி செய்தார் எனப் பாராட்டினார் கர்தினால் ஆஞ்சலோ சொதானோ.

ஜூன் 05, அன்று உள்ளூர் நேரம் முற்பகல் 11.30 மணிக்கு வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் கர்தினால் லூர்துசாமி அவர்களுக்கு இறுதி வழியனுப்பும் திருப்பலி நிகழ்த்தி மறையுரையாற்றிய, கர்தினால்கள் அவைத் தலைவர் கர்தினால் சொதானோ அவர்கள், கர்தினால் லூர்துசாமி அவர்கள் தலத்திரு அவைகளுக்கும், அகிலத் திருஅவைக்கும் செய்த அரும்பணிகளைப் பாராட்டினார்.

உயிர்த்துடிப்புள்ள, மிகுந்த ஆர்வமிக்க அருட்பணியாளராக பத்து ஆண்டுகள் தனது பாண்டிச்சேரி உயர், மறைமாவட்டத்திற்கும், பத்து ஆண்டுகள் பங்களூர் உயர்மறைமாவட்டத்துக்குமென உழைத்த கர்தினால் லூர்துசாமி அவர்கள், திருத்தந்தை 6ம் பவுல் அவர்களின் அழைப்பின் பேரில் வத்திக்கான் வந்து நற்பணியாற்றினார் எனவும் புகழ்ந்தார் கர்தினால் சொதானோ.

உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன் என்றுரைத்த தூய பவுல் அடிகளாரின் வார்த்தைகளை அடிக்கடி உச்சரித்த கர்தினால் லூர்துசாமி அவர்களின் ஆன்மா நிறைசாந்தியடைய நாம் அனைவரும் செபிப்போம் எனவும் உரைத்தார் கர்தினால் சொதானோ.

ஆயிரக்கணக்கான இந்தியர்களும் மற்றவர்களும் கலந்து கொண்ட இந்தத் திருப்பலியின் இறுதியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வந்து இறந்த கர்தினால் லூர்துசாமி அவர்களின் பூத உடலுக்கு இறுதி மரியாதை செலுத்திச் செபித்தார்.

நற்செய்தி அறிவிப்புப் பேராலயத்தின் செலளாளராக 10 ஆண்டுகளும், பின்னர், கர்தினாலாக கீழை வழிபாட்டுமுறை பேராயத்தின் தலைவராக 7 ஆண்டுகளும் பணியாற்றி ஓய்வுபெற்ற கர்தினால் லூர்துசாமி அவர்களின் உடல் இந்தியாவின் பாண்டிச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

புதுச்சேரி - கடலூர் உயர் மறைமாவட்டத்தின் பேராலயத்தில் ஜூன் 9ம் திகதி இறுதி அடக்கத் திருப்பலியும். அடக்கச் சடங்குகளும் நடைபெற்றன.

# கர்தினால் லூர்துசாமி அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட நிகழ்வில், 20,000த்திற்கும் அதிகமானோர் பங்கேற்பு

உலகக் கத்தோலிக்கத் திருஅவைக்காகவும் ஆசியத் திருஅவைக்காகவும் அயராது உழைத்த கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்களின் மறைவு, ஈடுசெய்ய முடியாத ஓர் இழப்பு என்று மும்பைப் பேராயர், கர்தினால் Oswald Gracias அவர்கள் கூறினார்.

ஜூன் 2, கடந்த திங்களன்று உரோம் நகரில் இறைவனடி சேர்ந்த கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்களின் அடக்கத் திருப்பலியும், இறுதிச் சடங்குகளும், ஜூன் 9 இத்திங்களன்று புதுச்சேரி கடலூர் உயர் மறைமாவட்ட பேராலயத்தில் நிறைவெற்றப்பட்டது.

இறுதித் திருப்பலியில் கலந்துகொண்ட கர்தினால் கிரேசியஸ் அவர்கள் ஆசிய செய்திக்கு அளித்த பேட்டியில், மிக இளவயதில் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் பங்கேற்ற அருள்பணியாளர் என்ற பெருமைபெற்ற கர்தினால் லூர்துசாமி அவர்கள், தற்போது, இந்தியத் திருஅவைக்காகவும், ஆசியத் திருஅவைக்காகவும் சக்திமிகுந்த வகையில் பரிந்துபேச இறைவனிடம் சென்றுள்ளார் என்று கூறினார்.

கர்தினால் மறைவையொட்டி திங்களன்று புதுச்சேரியில் விடுமுறை அறிவிக்கப்பட்டது என்றும் ஊடகங்கள் கூறுகின்றன.

இவ்வாண்டு தன் 90வது வயதை நிறைவு செய்த கர்தினால் சைமன் லூர்துசாமி அவர்களின் உடல், புதுச்சேரி கடலூர் உயர் மறைமாவட்டத்தின் அமல அன்னை பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்ட நிகழ்வில் 20,000ற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர் என்று ஆசிய செய்திக்குறிப்பொன்று கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியால் வாழ்வு பெற்ற விசுவாசிகளின் சமூகம்

இயேசு தாம் விண்ணேற்பு அடைவதற்கு முன்னர் தம்மைப் பின் சென்றவர்களை தூய ஆவியைப் பெறும்வரை ஜெருசலேமில் தங்கியிருக்குமாறு பணித்தார் (திப. 1: 4 – 5) அவர்களும் இயேசுவின் பணிப்புக்கு அமைந்து, யெருசலேமில் தங்கியிருந்து தூய ஆவியால் அருட்பொழிவு செய்யப்பெற்றார்கள் (திப. 1: 12 – 14) இறையாட்சியின் புதிய சாட்சிய சமூகமாக வடிவமைக்கப்பட்டார்கள்.

இறைவனின் ஆவியை இயேசுவில் பெற்று, ஆவியின் அருங்கொடைகளால் அணிசெய்யப்பட்டு, அவரின் தூண்டுதலில் முற்றிலும் தங்கி வாழ்ந்த ஒரு விசுவாசிகளின் சமூகமாக புதிய ஏற்பாடு தொடக்கக் கிறிஸ்தவர்களின் சமூகத்தை சித்தரிக்கின்றது. இங்கு அக்கிறிஸ்தவ சமூகத்தின் தன்மையையும், அச்சமூகம் 'ஆவிக்கேற்ற ஒரு வாழ்வை எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதையும் புனித பாவுலுவின் படிப்பினைகளுடன் காண்போம்.

### தூய ஆவியில் புதிய ஏற்பாட்டுச் சமூகம்

தூய ஆவியால் வாழ்வு பெற்ற தொடக்கக் கிறிஸ்தவ சமூகத்தை இறைவனுடைய புதிய இஸ்ரயேலாகிய மெசியா சமுதாயமாக புதிய ஏற்பாடு சித்தரிக்கின்றது. இச்சமூகம் ஆவியாருடைய ஆற்றலில் வடிவமைக்கப்பட்டு, காப்புப் பெற்று, வழிநடத்தப்படுகிறது. முந்தைய இஸ்ரயேலுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை தம் உரிமைச் சொத்தாகப் பெற்று அவை நிறைவேற்றப்பட சான்று பகர்கின்றது (திப. 2: 16-17; 3: 25-26; கலா. 6:15-16; 1பேது. 2: 9-10). மேலும், இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வு, பணி, மரணம், உயிர்ப்பு மூலமாக இஸ்ரயேல் சமூகத்தில் எதிர்பார்க்கப்பட்ட அனைத்தும் இப்போது நிறைவேறுகிறது என்பதை முதன்மையான போதனையாக புதிய ஏற்பாடு தருகின்றது (மாற் 1:14-15; லூக் 4: 4 - 6; திப. 2: 17-21; 3: 21-24; 10: 43).

கிறிஸ்து இயேசுவின் உடலாகிய அச்சமூகத்திற்கு அதனுடைய கூட்டுறவு வாழ்வுக்கு இன்றியமையாத அனைத்துக் கொடைகளையும் தூய ஆவியானவர் பொழிகின்றார். ஆண்டவரின் ஆவியானவர் தாமே அதன்மீது ஆட்சி செலுத்துகிறார் (திப. 2: 33; உரோ. 5: 8; கலா. 5: 22-23; 1 கொரி. 1: 7;, 10: 11; 2 கொரி. 3: 17). இக்கிறிஸ்தவ சமூகம் எதிர்கால நிறைவுக்காக காத்திருக்கும் அதேவேளையில், புதிய காலத்தின் ஆசீர்களால் தொடர்ந்தும் நிரப்பப்படுகின்றது (1 கொரி. 1: 7; 10: 11; எபி. 6: 5). ஆவியால் நிரப்பப்பட்ட ஒப்புறவில் வாழ அச்சமூகம் ஆவியின் தூண்டுதல் பெறுகின்றது. இவ்வாறு, தொடக்கக் கிறிஸ்தவர்கள் இயேசுவில், இயேசுவால் உறுதி செய்யப்பட்ட நிறை வாழ்வை (யோவா. 10:10) முன்சுவைத்துப் பங்கேற்கும் "முதற்கனிகளாகவும்" (உரோ. 8: 23), அச்சாரமாகவும் உள்ளனர் (2 கொரி. 1: 22; 5: 5; எபே. 1: 14). இன்னும் முழுமை பெறாத இறையாட்சியின் வாழ்வானது, தூய ஆவியில் "நீதியிலும், உண்மையிலும், அமைதியிலும், மகிழ்ச்சியிலும்" வெளிப்படுகிறது (உரோ. 14: 17).



சுருக்கமாக, இயேசுவின் 'வழியைப்' பின்பற்றிய இயக்கமான தொடக்கக் கிறிஸ்தவ சமூகத்தின் அனைத்துச் செயல்களிலும், அதன் தன்மையிலும் தூய ஆவியானவர் செயல்படுபவராக உள்ளார் என்பது விசுவசிக்கப்பட்டது. கிறிஸ்தவ ஒன்றிப்பு வாழ்வை குறை நிறைகளுடன வாழ்ந்து அதனுடைய வளர்ச்சிக்கான தேவைகளை தேர்ந்து தெளிந்த போது, தூய ஆவியின் ஆற்றல் தேவைப்பட்டது. இது ஆவியின் ஆற்றலில் தொடர்ந்தும் தங்கியிருப்பதை தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. இதனால் அவர்கள் 'பல்வேறு கொடைகள்', 'பல்வேறு பணிகளால்' அணி செய்யப்பட்டு தூயஆவியில் வாழும் வாழ்வை புனித பாவுலு பல்வேறு வழிகளில் விளக்குகிறார்.

### தூய ஆவியில் கொரிந்தியத் திருச்சபை

தூய ஆவியின் கொடைகளால் அணி செய்யப் பெற்ற சமூகமாக கொரிந்தியத் திருச்சபையை புனித பவுல் காண்கிறார். அதன் வாழ்வை விளக்குவதற்கு அவர் உடலை ஓர் ஒப்புவமையாகப் பயன்படுத்துகிறார். உடல் ஒன்றே. அதன் உறுப்புகள் வேறுபட்டவை. அவற்றின் செயல்களும் வேறுபட்டவை. ஆனால் அவை ஒன்றையொன்று சார்ந்தவை, ஒரே உடலாய் உள்ளன. அதுபோல் தூய ஆவியின் கொடைகள் பல்வேறுபட்டவை. ஆனால் ஒன்றை ஒன்று சார்ந்தவை. யாவும் கிறிஸ்தவத் தோழமை, ஒன்றிப்பு, கூட்டுறவு, நலமிக்க வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளன (1கொரி. 12: 12-26). எனவே, அனைத்துக் கொடைகளும் இந்த நோக்கத்திற்கு கீழ்ப் படுத்தப்பட்டு வாழ்விக்கப்பட வேண்டும் என்கிறார்.

மேலும், அனைத்துக்கும் ஊற்றாகிய தூய ஆவியானவரே முதன்மையான கொடையாகும். நற்செய்திக்கு சான்றுபகரவும், திருச்சபையைப் பெருமளவில் நடத்திச் செல்லவும் ஊழியர்களை அவரளிக்கிறார் (உரோ. 16:7; 1கொரி. 9: 5; 2கொரி. 8 23; கலா. 1: 19). தூய ஆவியின் கொடைகளாலான வாழ்வு முதிர்ச்சி அடைந்த மனித நிலைக்கும், கிறிஸ்துவின் முழுமையினுடைய தோற்றத்தின் அளவுக்கும் திருச்சபையைக் கொண்டுவர அன்புடன் அளிக்கப்படுகின்றது (1கொரி.14: 3; எபே. 4: 7-8). தூய ஆவியினுடைய பல்வேறுபட்ட அருளினுடைய நல்ல கண்காணிப்பாளராக இருப்பதற்கென கிறிஸ்தவர்களை அழைத்த இறைவனுக்கு ஆழ்ந்த பொறுப்புணர்வுடன் இக்கொடைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என்கிறார் (1கொரி. 14: 33, 36).

தூய ஆவியின் அருட்கொடைகள் என்பது தனிநபருக்கோ, கிறிஸ்தவ சமூகத்துக்கோ இறைவனால் இயேசுக்கிறிஸ்துவில் அளிக்கப்பட்ட சலுகையைக் குறிப்பிடுகிறது. ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்கல், புதுமை செய்யும் ஆற்றல், இறைவாக்குரைத்தல், தேர்ந்து தெளியும் திறன், பரவசப்பேச்சு, மற்றும் அதனை விளக்கும் திறன் (1கொரி. 12: 8 – 10) திருச்சபையினுடைய பல்வேறுபட்ட பணிக்கான கொடைகளாகும். இவை ஒன்றுபட்ட உடலாகிய திருச்சபையுடன் இணைந்துள்ளன. ஆக, திருச்சபையாகிய உடல் சரியாகச் செயல்படுவதற்கு இக்கொடைகள் அளிக்கும் பங்களிப்பைப் பொறுத்து இவை மதிப்பீடு செய்யப்படுகின்றன (1கொரி. 12: 14 – 26).

மேலும், விசுவாசம் ஒரு கொடையாகும் (1கொரி. 12: 9; பிலி. 1: 29). அப்பா எனக் கூக்குரலிடுமாறு விசுவாசியைத் தூண்டுவதனால், "ஆவியினாலான" செபமும் ஒரு கொடையே (உரோ. 8:16; 1கொரி. 14:14; எபே. 6: 18 – 19). இரக்கச் செயல்களைப் புரிவோரும் கொடைகளைக் கொண்டுள்ளனர் (1கொரி. 12: 28). தொடக்க திருச்சபைத் தலைவர்களும், மேற்பார்வையாளர்களும் வழிநடத்தலின், பராமரிப்புப் பணியின் கொடைகளைப் பெற்றவர்கள். இவ்வாறு, தொடக்க கிறிஸ்தவ சமூகம் தூய ஆவியினுடைய 'அருளாதாரங்களை முற்றிலும் சார்ந்து வாழ அழைப்புப் பெற்ற விசுவாசிகளின் சமூகமாகும். எனவே, புனித பாவுலு, தூய ஆவிக்குரிய தூண்டுதலை, ஏவுதலைப் பிரித்தறியவும், தேர்ந்து தெளியவும் திருச்சபையின் பல் நிலை உறுப்பினர்களை அழைக்கிறார் (1கொரி. 2: 12-15; 12:3; 14: 32). தேர்ந்து தெளிவது கிறிஸ்தவ உண்மையைப் பாதுகாக்க அவசியமானதாகும் (1தெச. 5: 18 - 21). திருச்சபையின் வளர்ச்சிக்கு தேவையாகும் (1கொரி. 14: 14 - 26).

### தூய ஆவிக்கேற்ப வாழ்தல்

இன்றைய திருச்சபை, விசுவாசிகளின் சமூகமாக தொடக்கத் திருச்சபையின் வழித்தோன்றலாகும். மேற்கண்ட தொடக்கத் திருச்சபையின் வாழ்க்கைப்பாங்கு திருச்சபைக்கு முன்னுதாரணமாகும். தூய ஆவிக்கேற்ப திருச்சபை வாழ்வது அதன் சிறப்புத் தேர்வு அல்ல. மாறாக, அதன் இயல்பும், அறக்கடனுமாகும். நம் சூழமைவில் இலங்கையில் திருச்சபை, முக்கியமாக, மறைமாவட்ட திருச்சபைகள் தூய ஆவிக்குத் திறந்த மனத்துடன் தத்தம் சூழமைவில் 'காலத்தின் குறி அறிந்து' தம்மை சுய ஆய்வு செய்வது இன்று அடிப்படைத் தேவையாகும். "ஊக்கம் தளராது, தூய ஆவியின் ஆர்வம் தணியாது ஆண்டவருக்கு ஊழியம் செய்யுங்கள்" (உரோ. 12:11) என்ற புனித பாவுலுவின் அறிவுரை மறைமாவட்ட ஆயர்கள் மட்டத்திலிருந்து கிறிஸ்தவ சமூகத்தின் அடிமட்டத்தை சென்றடைய வேண்டும். விண்ணேற்றத்துக்கு முன்னர், உயிர்த்த இயேசு சொன்னதைக் கேட்டு, மூடிய அறைக்குள் ஒன்று கூடி, காத்திருந்து தூய ஆவியைப் பெற்று, ஒரு புதிய சமுதாயமாக புறப்பட்ட தொடக்க கிறிஸ்தவ சிறுகுழுவைப்போல, இன்றும் நம் சூழமைவில் புத்துயிரும் புது வாழ்வும் பெற, இயேசுவின் வார்த்தைக்குப் பணிவு கொண்ட மனத்துடன், காத்திருந்து செபிப்பதும், வாழ்வதும், செயல்படுவதும் ஓர் தொடர் நிகழ்வாக வேண்டும்.

**ஜெராட் டீ ரோசய்ரோ, அ. ம. தி.**

# — ஓர் இனிய மது! —



ஒரு சின்னப் பையன் கோயில் வளாகத்தில் சைக்கிளில் சுற்றிக் கொண்டிருந்தான். ஃபாதர் அவனிடம் "சைக்கிளை நிறுத்திவிட்டு கொஞ்சம் கோயிலுக்குள் வந்து செபித்தால் என்னடா?" என்று கேட்டார். உடனே அவன் "ம்ஹூம், மாட்டேன். என் சைக்கிளுக்கு பூட்டு இல்லை. சும்மா விட்டுப் போனால் யாராவது திருடிக் கொண்டு போய்விடுவார்கள்" என்றான். "அதெல்லாம் ஒன்றும் போகாது. உன் சைக்கிளை பரிசுத்த ஆவியானவர் பத்திரமாகப் பார்த்துக் கொள்வார். நீ கோயிலுக்கு வந்து செபி" என்றார் ஃபாதர்.

பையனுக்கு தயக்கம் போய்விட்டது. சைக்கிளை நிறுத்திவிட்டு உற்சாகமாகக் கோயிலுக்குள் போனான். பீடத்துக்கு முன் அவனை முழங்காலில் நிறுத்தி "எங்கே சிலுவை அடையாளம் வரை பார்ப்போம்" என்றார். பாதர். பையன் பயபக்தியாக "பிதா, சுதன், பெயராலே ஆமென்" என்றான்.

ஃபாதருக்கு பயங்கரக் கோபம். 'ஒரு கத்தோலிக்க பையனுக்கு சிலுவை அடையாளம் கூட சரியாகத் தெரியவில்லை. மறைக்கல்வி வகுப்பில் அப்படி என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள்?' என்ற எரிச்சலுடன் "பிதா, சுதன் மட்டும் சொல்றே, எங்கடா பரிசுத்த ஆவியைக் காணோம்?" என்றார். பையன் ஃபாதரை நிமிர்ந்துப் பார்த்து நிதானமாகச் சொன்னான். "அவர் வெளியே என் சைக்கிளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்."

ரொம்பக் காலமாக திருச்சபையில் பரிசுத்த ஆவியாளவர் அத்தனை கண்டு கொள்ளப்படாத கடவுளாகத்தான் இருந்தார். இன்றைக்கு அப்படியில்லை. அருங்கொடை இயக்கம் ஆவியானவர் குறித்த ஒரு மறுமலர்ச்சியை திருச்சபையில் ஏற்படுத்தியுள்ளது. விளைவு வெகுஜன வழிபாட்டில் ஆவியானவர் அதிகம் கவனம் பெறத் துவங்கினார். கத்தோலிக்கர்கள் இன்றைக்கு ஆவியானவர் பற்றி நிறையப்' பேசுகின்றனர். பிரம்மாண்ட எழுப்புதல் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. பாடல்கள், புத்தகங்கள், செபங்கள், கருத்தரங்குகள் மூலம் அன்றாட கிறிஸ்தவ வாழ்வில் ஆவியானவரின் செயற்பாடு பற்றிய புரிதல் அதிகமாகியுள்ளது. இதெல்லாம் நல்ல முன்னேற்றமே. அதற்காக, பரிசுத்த ஆவியானவர் ஏதோ ஒரு புதுக் கடவுள் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. அவர் முதல் முடிவில்லாத தமத்திருத்துவத்தின் மூன்றாம் நபர். படைப்பு உருவாகுவதற்கு முன்பே அவர் தண்ணீரில் அசைவாடிக் கொண்டிருந்ததாக தொடக்க நூல் 1:2 இல் கூறப்பட்டுள்ளது.

**தூய ஆவியார் பெருவிழா சிறப்புக்கட்டுரை**

பழைய ஏற்பாட்டு நூல்களையும், நற்செய்திகளையும் வாசித்தால், ஆவியானவர் பற்றிய குறிப்புகளை ஆங்காங்கே காணலாம். ஆனால் திப 2:1-11 இல் விபரிக்கப்படும் பெந்தக்கோஸ்து ஒரு தனித்துவமான நிகழ்வு. அதற்கு முன்னுதாரணமில்லை. அதை பரிசுத்த ஆவியானவரின் தாண்டவம் என்றுகூடச் சொல்லலாம். கொடுங்காற்று, இரைச்சல், நெருப்பு நாவுகள் என எல்லாம் கலந்து கட்டி அடித்த ஒரு Sepctaular ஒலி-ஒளி நிகழ்வின் மூலம், ஆவியானவர் வானத்தின் கீழுள்ள அனைத்து நாடுகளின் (2:5) கவனத்தையும் எருசலேமில் இருந்த ஒரு வீட்டின் மேல் குவித்தார். அன்றைக்குத்தான் திருச்சபைக்கு 'ஹேப்பி பர்த்டே'. அதுவரை இலை மறை காயாகச் செயல்பட்டு வந்த ஆவியானவர் முன்னணிக்கு வந்து, அப்போஸ்தலிக்க நடவடிக்கைகளின் தலைமை சூத்திரதரி ஆகிறார். அவர் போகச் சொன்ன இடங்களுக்கு திருத்தூதர்கள் போனார்கள். சொல்லச் சொன்ன வார்த்தைகளைச் சொன்னார்கள். செய்யச் சொன்ன காரியங்களைச் செய்தார்கள். 'திருத்தூதர் பணிகள்' என்று புத்தகத்தின் பெயர் இருந்தாலும் அவை உண்மையில் ஆவியானவரின் பணிகளே.

புனித பாத்ரே பியோ பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? ஐந்து காய மகிமை பெற்றவர்! இவர் தனது உறுதிபூசுதல் நாளைப் பற்றி இப்படிச் சொல்வார்.... "அந்த நாளை நினைக்கும் போதெல்லாம் நான் ஆனந்தத்தில் அழுகின்றேன். அது என் வாழ்வின் முக்கியமான நாள். நான் மறக்க முடியாத நாள். அன்றைக்கு என்னை யாரோ ஆகாசத்திற்கு கவ்வி இழுப்பதைப் போல உணர்ந்தென். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஒரு நெருப்பு என்னை ஆட்கொண்டது. அந்த நெருப்பு என்னை எரித்தது. என்னை உட்கொண்டது. ஆனாலும், அது எனக்கு எந்த வலியையும் தரவில்லை."


பெந்தகோஸ்து தினத்தன்று அப்போஸ்தலர்களுக்கு நேர்ந்ததுவும் அதுதான். ஒரு நெருப்பு அவர்களை ஆட்கொண்டது. அந்த நெருப்பே அவர்களை ஆட்டுவித்தது. அப்போஸ்தலர்கள் பேசும் வார்த்தைகளை தத்தமது வார்த்தைகளில் புரிந்து கொண்டு மலைத்த சிலர் "என்ன ஆயிற்று இவர்களுக்கு? இவர்கள் இனிய மதுவை நிரம்பக் குடித்துள்ளனர்" என்று கிண்டல் பண்ணியதாக திப 2:13 சொல்கிறது. ஆம், பெந்தகோஸ்து தினத்தன்று அப்போஸ்தலர்கள் ஓர் இனிய மதுவை நிரம்பக் குடித்தது உண்மையே. அந்த மதுவின் பெயர் பரிசுத்த ஆவி!

08ம் பக்கம் பார்க்க......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளால் கூட முடியாதாமே!

முனைவர் அ.மரிய தெரசா



"பறந்து செல்லுங்கள்! உலகம் ஆறு நாட்களில் படைக்கப்பட்டது என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் விரும்பும் எதை வேண்டுமானாலும் என்னிடம் கேளுங்கள் - நேரத்தைத் தவிர!" என்ற நெப்போலியனின் புரிதலை நாம் என்றேனும் நினைத்துப் பார்த்தது உண்டா? ஆனால் நெப்போலியன் கூறியதைப்போல நேரத்தைக் கடனாகக்கூட கொடுக்க முடியாது.

நேரம் பொன்னானது; ஆனால் சேமிக்க முடியாதது.
நேரம் ஓடிக் கொண்டிருப்பது; ஆனால் நிறுத்த முடியாதது.
நேரம் கடந்து செல்வது; ஆனால் பார்க்க இயலாதது.
நேரம் போனபின் தெரிவது; ஆனால் வருவது தெரியாதது.

மனிதர்கள் உருவாக்கும் கடிகாரத்தை நிறுத்தி விடலாம். அதன் நேரத்தைக் காட்டும் முள்ளையும் நம் விருப்பத்திற்கேற்ப திருப்பி வைத்து விடலாம். கடிகாரம் நாம் சொல்வதைக் கேட்பதுபோல, நேரம் செயல்படுவதில்லை. இத்தனை ஆண்டுகளாக இப்படித்தான் நடந்திருக்கிறது. அதனோடு முரண்பட்டாலும் அதற்கு எதுவும் புரியாது.

அரசனுக்கும் - ஆண்டிக்கும் உள்ள வேறுபாடோ, அதிகாரத்தில் இருப்போர் - குடிமகன் என்ற பாகுபாடோ அதற்குத் தெரியாது. அரசன் ஆணை இட்டாலும் அதற்குக் கேட்காது. நாம் தூங்கிக் கொண்டிருந்தாலும், விழித்திருந்தாலும் ஒவ்வொருவருக்கும் எந்தப் பாரபட்சமின்றி சராசரியாக 24 மணி நேரங்களாகப் பிரித்துக் கொடுத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடிக் கொண்டேயிருக்கிறது.

"உன்னைப் படைத்த கடவுளாகிய நான் உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்று சொன்னால கூட "அப்படியா!" என மகிழக்கூடிய கால இடைவெளி அதற்குக் கிடைப்பதில்லை.

தாய்-சேய் உறவானாலும், கணவன் - மனைவி பந்தமானாலும், உற்ற தோழமை தொடர்பானாலும், அக்கா - தங்கை பிணைப்பானாலும் என் வீட்டை, என் பொருளை, என் சொத்தைப் பிறருக்குக் கொடுப்பதைப்போல என் நேரத்தைக் கொடுக்க முடியாது. வங்கிகளில் ஒருவர் இன்னொருவர் கணக்கிற்குப் பணத்தைப் பரிமாற்றம் செய்வதுபோல, நேரத்தைப் பரிமாற்றம் செய்யவும் முடியாது. பரிவர்த்தனை செய்யவும் முடியாது. வேடிக்கையான கணித உடன்பாடும் இதற்கு உண்டு.

யாருக்கும் கொடுக்க முடியாத நேரத்தை
பெருக்க, வகுக்க, கழிக்க முடியும்!
யாராலும் நிறுத்த முடியாத நேரத்தை
நீங்க, நாங்க பயன்படுத்த முடியும்!

'நேர நிர்வாகத்தின் முன்னோடி' என அழைக்கப்பட்ட பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலிய வியாபாரி லியான் ஆல்ப்ரட்டி பின்வருமாறு கூறுகின்றார்; "நான் காலையில் எழுந்தவுடன் எனக்குள்ளேயே நினைத்துக்கொள்வேன். பல வேலைகள் உள்ளன. இன்று நான் என்ன செய்ய வேண்டும்? எல்லா வேலைகளையும் நினைத்துப் பார்த்து ஒவ்வொன்றையும் முடிக்க வேண்டிய நேரத்தைத் தீமானிப்பேன். நான் எனது தூக்கத்தையும், உணவையும்கூட இழக்கத் தயாராக இருப்பேன். அவைகளை நாளை கூட செய்து கொள்ளலாம்." நேர நிர்வாகத்தைப் பற்றி சிறந்த கருத்துக்களை இதை விட வேறு யாராலும் இவ்வளவு சிறப்பாகச் சொல்ல முடியுமா என்பது சந்தேகமே.

ஒவ்வொருவருக்கும் கிடைத்திருப்பது 24 மணி நேரமே! பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும் அது கடந்து சென்றுவிடும். நேரத்தைப் பயன்படுத்துவதில் ஆளுக்கு ஆள் வேறுபாடு உண்டு. ஒரு நிமிடத்தில் பேச வேண்டிய செய்தியை ஒருமணி நேரம் பேசுவோரும், ஒரு மணி நேரம் பேச வேண்டியதை ஒரு நிமிடத்தில் புரிய வைப்போரும் நம்மிடையே உண்டு.

படிப்பா? வேலையா? தூக்கமா? எதுவாக இருந்தாலும் ஒவ்வொன்றிலும் ஆக்கபூர்வமான நேரம் என்ற ஒன்று உண்டு. ஒரு நாளின் 24 மணி நேரத்தையும் ஆக்கபூர்வமாக யாராலும் பயன்படுத்த முடியாது. உண்மையாகப் படித்த நேரம், உண்மையாக உழைத்த நேரம், நன்றாகத் தூங்கிய நேரம்... இவையே ஆக்கபூர்வமான நேரம். இதுவும் ஆளுக்கு ஆள் வேறுபடும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எவ்வளவு வேலைகளை முடித்துள்ளோம் என்பதை வைத்தே ஆக்கபூர்வமான வேலை யையும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் எவ்வளவு புரிந்து படித்துள்ளோம் என்பதை வைத்து ஆக்கபூர்வமான படிப்பையும் அளக்க முடியும்.

மாணவனுக்கு மாணவனும், ஆசிரியருக்கு ஆசிரியரும் இதில் வேறுபடுவார்கள். தயார் நிலையில் இருக்கும் மாணவன் (கற்பதற்கு) அதிகமாகக் கற்கின்றார். முன் தயாரிப்போடு வகுப்புக்குச் செல்லும் ஆசிரியர் அதிகமாகக் கற்பிக்கின்றார். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டால் சிலருக்க நேரம் போதாது. பலருக்கு நேரம் போகாது.

நேர நிர்வாகத்தில் இன்னொரு சாரார் உண்டு. நேரத்துக்கு அடைமொழி கொடுப்பவர்கள் இவர்கள். தாங்கள் நினைப்பதும், செய்வதும் சரியாக இருந்தால் நல்ல நேரம் என்றும், சரியாகச் செயல்பட முடியாவிட்டால் கெட்ட நேரம் என்றும் பாகுபடுத்தும் இவர்களில் ஆய்வு செய்யும் அறிவியலாளர்களும் உண்டு. ஆனால் சாதனை ஒன்று மட்டுமே மனக்கண் முன்பு தெரிபவர்களுக்கு இந்த வேறுபாடுகள் தெரியாது. பிறர் சொன்னாலும் புரியாது.

மன்சாய் என்ற சென் குரு ஞானம் பெற பல முயற்சிகள் மேற்கொண்டாராம். ஆனால் ஞானம் அவருக்குக் கிடைக்கவில்லை. ஒரு நாள் ஒரு கறிக்கடை அருகில் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கே கறி வாங்க வந்த ஒருவர் கறி விற்பவரிடம் "உன்னிடம் இருப்பதில் சிறந்த கறியைத் தேர்ந்தெடுத்து எனக்குக் கொஞ்சம் கொடு" என்றாராம். அதற்கு அந்தக் கடைக்காரர் "என்னிடம் இருக்கும் அனைத்தும் சிறந்த கறிதான்" என்றாராம். எல்லா நேரமும் சிறந்த நேரம்தான் என்ற ஞானத்தைக் கறிக் கடைக்காரரிடம் இருந்து பன்சாய் பெற்றாராம்.

நல்ல நேரம் - கெட்ட நேரம், சரியான நேரம் - தவறான நேரம், பொல்லாத நேரம் - சாதகமான நேரம் என்ற பாகுபாடெல்லாம் வெற்றியை நோக்கியே செயல்படுவோருக்குப் புரியாது. வெற்றி பெறுவோர் நேரத்தை அவர்களுக்காக வேலை செய்யும்படி செய்து விடுகிறார்கள். எல்லா நேரத்திலும் எப்படிச் செயல்படுவது என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருப்பதன் மூலம் வெற்றி பெறுகின்றார்கள்.

"இருக்கும் நேரத்தில் நிறைய செயல்களைச் செய்து முடிக்க நினைக்காமல், சரியான செயல்களை அதற்குரிய புத்திசாலித்தனத்துடன் செய்ய வேண்டும்" என நிக்கி ஜாய் தன்னுடைய 'What Winners do to win' என்ற புத்தகத்தில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்.

மனிதர்களுக்கு ஒரு நாளின் 24 மணி நேரச் செயல்பாடுகளும் ஒன்றுபோல் உடையவை அல்ல; ஒவ்வொருவர் வாழ்விலும் உடனடியாக முடிக்க வேண்டிய பணிகள், காலம் தாழ்த்தக்கூடாது என்பதான நிகழ்வுகள் வருவதுண்டு. அப்போது நாம் அவற்றுக்கு முன்னுரிமை கொடுப்போம். கொடுக்கவும் வேண்டும்.

தேர்வு நெருங்கும் காலங்களில் திரைப்படம் பார்க்கச் செல்வதையும், விளையாட்டுகளை ரசிக்கச் செல்வதையும் ஒதுக்கிவிட்டு தேர்வுக்குத் தயாராவோம். உண்டது உடம்புக்கு ஒவ்வாமல் உடலில் கோளாறு ஏற்படும்போது மருத்துவமனைக்குச் செல்வதை முன்னிலைப்படுத்துவோம். காலம் தாழ்த்தினால் விபரீத விளைவுகள் ஏற்படும் என்பதையும் நாம் அறிந்திருக்கின்றோம்.

ஒவ்வொருவரின் உடல் நிலைக்கு ஏற்ப, வயதுக்கு ஏற்ப, பார்க்கும் பணிக்கு ஏற்ப, உடலுக்குத் தேவைப்படும் ஓய்வுக்கு ஏற்ப நேர நிர்வாகத்தில் தனிப்பட்ட வேறுபாடுகள் இருக்க வேண்டும். அனைவருக்கும் ஒரே விதமான நேர நிர்வாகம் பொருந்தாது. இரவில் அதிக நேரம் படிப்பது சிலருக்குப் பிடிக்கும். வேறு சிலருக்கு அதிகாலையில் எழும்பிப் படிப்பது பிடிக்கும். பிறர் சொல்கிறார்கள் என்பதால் அடிப்படை விருப்பத்தை மாற்ற வேண்டிய தேவை இல்லை. ஆனால் குறிக்கோளை ஒட்டியே நமது நேர நிர்வாகம் அமைய வேண்டும்.

யானைகளைப் பிடிப்பதற்கும், எறும்புகளைத் தேய்ப்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. அதிகம் பயனைத் தரும் பெரிய குறிக்கோளுக்குத் தான் கூடுதலான நேரம் ஒதுக்க வேண்டும். "நம்முடைய வாழ்வில் எறும்புகளும், யானைகளும் எப்போதும் இருக்கின்றன. நம்மில் பலரும் உள்ளுக்குள் யானை வேட்டைப் பிரியர்கள் என்றாலும், கடைசியில் என்னவோ எறும்புகளைத் தேய்ப்பவர்களாகி விடுகிறார்கள்" எனக் குறிப்பிடுகிறார் கேத்லீன் ஹாக்கின்ஸ் என்ற நேர நிர்வாக வல்லுநர்.

படிக்கும் பருவத்தில் உயர்ந்த குறிக்கோளை அமைத்திருந்தாலும், அதன்படி முன்னிலைப்படுத்த தெரியாததாலும், முக்கிய குறிக்கோளுக்கு அதிக நேரம் ஒதுக்கத் தவறுவதால்தான் பல மாணவர்களும் வெற்றியாளர்களாகப் பிரகாசிக்கவில்லை என்ற உண்மையை ஹாக்கின்ஸ் இப்படிச் சுட்டிக் காட்டுகின்றாரோ?!

# நம்பிக்கையும் வெளிப்பாடுகளும்



ஜெ.மரிய அந்தோணி

கடவுளுக்கும், மனிதருக்குமிடையேயான உறவு நிலை இரண்டு இயக்கங்களாக (two movements) உருவெடுக்கிறது. ஒன்று, கடவுளை நோக்கிய மனிதனின் தேடல் இரண்டு, மனிதனை நோக்கிய கடவுளின் தேடல் திருச்சபையின் கால அட்டவணையில் உள்ள இரு காலங்கள் இந்த இரு வேறு தேடல்களை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. தபசுகாலம் என்பது கடவுளை நோக்கிய மனிதனின் தேடலை வலியுறுத்துகின்றது. திருவருகைக் காலம் என்பது மனிதனை நோக்கிய கடவுளின் தேடலை வலியுறுத்துகின்றது.

கடவுளை நோக்கிய மனிதனின் தேடலில் மனித முயற்சி மையம் பெறுகின்றது. செபித்தல், தியானித்தல், நோன்பிருத்தல், பக்தி முயற்சிகள், நற்செயல்பாடுகளைச் செய்தல் போன்றவை வழியாக இறைவனை நோக்கி மனிதன் நகர முயற்சிக்கின்றான். இத்தகைய முயற்சி எல்லா மதங்களிலும் வலியுறுத்தப்படுகின்றது என்பது கண்கூடு. ஆனால் கிறிஸ்தவத்துக்கே உரிய சிறப்பம்சம் கடவுள் மனிதனைத் தேடிவருவது. "மனிதன் வாழ்வைப் பெறுவதற்காக, அந்த வாழ்வை நிறைவாகப் பெறுவதற்கே" (யோவா 10:10) கடவுளே மனிதனைத் தேடி வருகிறார்.

இவ்வாறு மனிதனை நோக்கிக் கடவுள் வருவதையே நாம் 'வெளிப்பாடுகள்' (revelations) என்கின்றோம். கத்தோலிக்கத் திருச்சபையின் நம்பிக்கையின்படி இந்த வெளிப்பாட்டில் மூன்று கூறுகள் உண்டு.

அ) இயேசுக் கிறிஸ்து வழியாகக் கடவுள் தம்மை இந்த உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளார். இயேசு கிறிஸ்து கடவுளின் மகன் என்ற முறையில் கடவுளைப் பற்றிய மறையுண்மைகளை மனிதர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார். மனித அறிவு எல்லைக்குட்பட்டது. கடவுளோ எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர். எனவே, எல்லைக்குட்பட்ட மனித அறிவைக் கொண்டு எல்லைகளுக்கு அப்பாற்பட்ட கடவுளைப் புரிந்துகொள்வது கடினம். அவரது திட்டங்களை அறிந்து கொள்வது கடினம். எனவே, இக்குறையைப் போக்க கடவுளே தம் மகனை கிறிஸ்து என்ற மனித உருவின் வழியாக தம்மை வெளிப்படுத்தினார் என்று கிறிஸ்தவம் பறைசாற்றுகிறது.

ஆ) விவிலியத்தின் வழியாகக் கடவுள் தம்மை வெளிப்படுத்துகிறார். மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த கடற்பயணிகள் சிலர் இணைந்து ஒரு குழுவாகக் கடலில் பயணம் செய்தனர். கடலுக்குள் சென்று திரும்பும் வழியில் கடுமையாக பனி மூட்டத்தால் சூழப்பட்டனர். சுற்றியுள்ள எதையும் அவர்களால் பார்க்க முடியவில்லை. அவர்கள் அந்த வேளையில் முழுக்க முழுக்க நம்பியது திசை காட்டும் கருவியைத்தான். சரியான திசையில்தான் பயணிக்கின்றோமா என்ற குழப்பம் இருந்த போதிலும், திசை காட்டும் கருவியில் தங்களது நம்பிக்கையைப் பதியவைத்துப் பயணம் செய்தனர். பத்திரமாகக் கரை திரும்பினர். கடவுள் அருளிய விவிலியம் இந்தத் திசை காட்டும் கருவி போன்றது. வாழ்க்கைச் சூழ் நிலைகள் நம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தினாலும், விவிலியத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு அதன் அடிப்படையில் நம் வாழ்வை அமைத்துக் கொண்டோமென்றால், நம் வாழ்வு பாதுகாப்பான வாழ்வாக இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. காரணம், விவிலியத்தின் வழியாகக் கடவுள் தம்மை வெளிப்படுத்தி நம் வாழ்வு சரியான திசையில் பயணிக்கும்படி பார்த்துக் கொள்கிறார்.

இ) திருச்சபை மரபுகள் (tradition) வழியாகவும் கடவுள் தம்மைத் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார். இறைவன் கடந்த காலத்தில் மட்டும் செயல்படுபவர் அல்ல; தொடர்ந்து தம்மை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றார். உயிருள்ள இறைவன் உயிருள்ள மனிதர்கள் வழியாக தம்மை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். பிரிவினைச் சகோதரர்களும், பெந்தக்கோஸ்து கிறிஸ்தவர்களும் முதல் இரண்டு வெளிப்பாடுகளை மட்டும்தான் ஏற்றுக் கொள்கின்றனர். மரபுகள் வழியாக இறைவனின் வெளிப்பாடு நிகழ்கின்றது என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இது ஏறத்தாழ கடவுள் கடந்த காலத்தில் மட்டும்தான் செயல்பட்டார், இன்று செயல்படுவதில்லை என்று சொல்வது போன்றது.

இவ்வாறு மூன்று வகைகளில் தம்மை வெளிப்படுத்தி மனிதனை நோக்கி வரும் கடவுளுக்கு நாம் சொல்லும் பதில் மொழியே இறை நம்பிக்கை என்பது (Faith is response to God's revelations). ஆனால் இப்படிப் பட்ட இறை நம்பிக்கை என்னும் பதில் மொழி வெறும் வார்த்தை அளவிலானதாகவும், அறிவுபூர்வமானதாகவும் இல்லாமல், அனுபவபூர்வமானதாக இருக்க வேண்டும் என்பதே இறைவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய இறை நம்பிக்கை என்னும் பதில்மொழி இரண்டு நிலைகளில் நடைபெற வேண்டியிருக்கின்றது. ஒன்று, தனிப்பட்ட அளவில் (Personal faith); இரண்டு, குழு அளவில் (Communitarian faith). நம் நம்பிக்கை இந்த இரண்டு நிலைகளிலும் இயங்கும்போதுதான் அது முழுமை பெற்றதாக மாறுகிறது. நம்மில் பலருக்கு குழு நமபிக்கை மட்டும்தான் இருக்கிறது. தனிப்பட்ட நம்பிக்கை கிடையாது. அதாவது ஆலயத்திற்கு வந்து, கூட்டத்தோடு இணைந்து, அறிந்தும் அறியாமலும், புரிந்தும் புரியாமலும் விசுவாசப் பிரமாணத்தை அறிக்கையிடுவதோடு நம் இறை நம்பிக்கை முடிந்து விடுகின்றது. இதையும் தாண்டி நாம் அறிக்கையிடும் இறை நம்பிக்கை நம தனிப்பட்ட வாழ்வைப் பாதிப்பதில்லை. இங்கு குழுவோடு இணைந்து நாம் அறிக்கையிடும் இறை நம்பிக்கை தனிநபரின் உள்ளத்தையும், வாழ்வையும் தொடாததாக இருக்கின்றது. கடவுளுக்கும், நமக்குமிடையேயான உறவு ஒரு

05ம் பக்கம் பார்க்க......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணில் பட்டதும் கருத்தைத் தொட்டதும்!

தந்தை எட்வர்ட்

நேசிப்பது எல்லாம் கிடைத்துவிட்டால்
கண்ணீர்த் துளிகளுக்கு மதிப்பில்லை....
கிடைப்பதையெல்லாம் நேசித்துவிட்டால்
கண்ணீருக்கு அவசியமில்லை

நல்லவர்களின் வீட்டில்
நிறை செல்வம்
நிலைத்திருக்கும்
பொல்லாரின் வருவாயால்
விளைவது தொல்லையே'' (நீமொ 15:6)

எதுவும் தெரியாமல்
ஒரு செயலை
ஆரம்பிப்பது தவறில்லை
எதுவும் தெரிந்து
கொள்ளாமல்
அதை விட்டு
விடுவதுதான் தவறு!


நம் வாழ்வில் ஒருமுறை ஜெயிக்க
நண்பர்கள் துணை போதும்....
ஆனால், வாழ்நாள் முழுக்க ஜெயிக்க
எதிரிகளும் தேவை.....

*உன் முதுகுக்குப் பின்னால்*
*பேசுபவர்களைப் பற்றி*
*கவலைப்படாதே...*
*நீ அவர்களுக்கு இரண்டு அடி*
*முன்னால் இருக்கிறாய் என்று*
*பெருமைப்படு....*

தவறுகள் அனுபவம் ஆகலாம்
ஆனால் அனுபவம் பெறவேண்டும்
எனத் தவறுகள் செய்யாதே!

காதல் தோல்வியா?
கவலை வேண்டாம்!
பெற்றவள் தவிர
மற்றவள் மறுபடி
கிடைப்பாள்....
யாருக்கோ!!!

ஏன்யா.... பணத்த மட்டும் கரெக்டா
பேங்குல போடுகிறீங்களே....
அதுமாதிரி... குப்பையையும்
குப்பைத்தொட்டியில போட்டா என்ன?



# நில் கவனி சொல்

## நம்பிக்கை

நம்பிக்கை
என்பது
நாணல்
போன்றது!
நன்மையோ
தீமையோ
வெற்றியோ
தோல்வியோ
வளைந்து
கொடுக்குமே
தவிர
ஒருகாலும்
உடைந்துவிடாது

*செலின்*

## இல்லை.... இல்லை....

நம்பிக்கை இல்லாமல்
அன்பு இல்லை...
அன்பு இல்லாமல்
சந்தோஷம் இல்லை...
சந்தோஷம் இல்லாமல்
வாழ்க்கை இல்லை...
வேதனை இல்லாமல்
சாதனை இல்லை.....
வலிகள் இல்லாமல்...
வழிகள் இல்லை
விழிகள் மூடினால்
வெற்றிகள் இல்லை...
முயன்ற மனிதன்
தோற்றது இல்லை...

சகோ. வானரசி.

## அழகு

ஆடை அழகும்
தலைமுடி அழகும்
ஒப்பனை செய்வதும்
அழகே!
ஆனால் நிரந்தர அழகு
அறிவுள்ளவனாக
நம்மை உருவாக்கும்
கல்வியே!
நல்ல நட்பும்
நல்ல புத்தகமும்
நல்ல அனுபவங்களுமே
சிறப்பான அழகு!

ஞா. மரிய ஆரோக்கியம்.

## கல்வி

சித்திரச் சொல்லுக்கு சிந்தையில்
வளம் சேர்ப்பது கல்வி!
மாறி வரும் உலகில்
புதியன படைப்பது கல்வி!
உடலில் உறுதிகொண்டு
ஒவ்வொரு விதையும்
விருட்சமாக வீரியம் கொடுக்கும்
கல்வியில்சிறந்து மானுடம்செழிக்க
சுவடுகள் பதிப்போம்!

சி. கன்னிகா


## முயற்சி

வாழ்க்கை என்னும் கடலில்
நம்பிக்கை என்னும் படகில்
உண்மை என்னும் துடுப்பில்
இனிமை என்னும்
கரையைச் சேர முடியும்
முழுமை என்ற முயற்சி மட்டும்
உன்னிடம் இருந்தால்!

பீ. கரோலின்

# புறாவிடம் கற்றுக்கொள்வோம்

சகோ. இராக்கிளி SMSM



“பறவைகள் விதைப்பதில்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதுமில்லை” என்கிறது விவிலியம். உலகிலேயே மிகப்பெரிய பறவை ‘ஆஸ்ட்ரிச்’ எனப்படும் நெருப்புக்கோழி, மிகச்சிறிய பறவை ‘ஹம்மிங்’, இதன் எடை இரண்டு கிராம் மட்டுமே. பறவைகள் நமது எண்ணங்களுக்கு சிறகுகள் முளைக்கச் செய்பவை. புறாக்களைப் பார்க்கும்போது இன்னும் உயரமாய் மேலே செல்ல வேண்டும் என்கிற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. பறவைகள் இயற்கை தங்களை ஒருபோதும் ஏமாற்றாது என்ற நம்பிக்கையில் அன்றாடம் தங்களுக்கான உணவை உண்டு மகிழ்கின்றன.

பறவைகள் சோம்பேறிகள் அல்ல; பசித்த பறவை இரை தேடிப் பறக்கும். களைத்த பறவை கூடு தேடி திரும்பும். பறவைகள் ஏழை-பணக்காரர் என்ற பாகுபாடு அறியாதது. பறவைகளின் விடுதலை அடையாளமே சுதந்திரத்தின் குறியீடுகள். ‘விசா’ இன்றி கண்டங்களைக் கடப்பவை. பாரெங்கும் பறந்து திரிபவை. புறாக்களிடமிருந்து கற்க வேண்டிய எண்ணிலடங்காத பாடங்களை அறிவோம். மகாபாரதக் கதையில் காட்டில் வேடன் ஒரு பெண் புறாவைப் பிடித்துக் கூட்டில் அடைத்து, இரவு ஒரு மரத்தடியில் அங்கேயே தங்கும் முடிவுடன் வந்து அமர்ந்தான். வாடைக்காற்றால் அவன் உடல் நடுங்கிற்று. பசி வாட்டியதால் தானும், தன் இணையும் கூடு கட்டி வாழும் மரத்தின் அடியில் வேடன் தற்செயலாக வந்து அமர கூண்டில் சிக்கிய பெண் புறா புரிந்து கொண்டது. தன்னைக் காணாமல் கலக்கத்துடன் கிளையில் வீற்றிருந்த ஆண் புறாவை அது பார்த்து ‘என் நாயகரே, நம் மரத்தின் அடியில் இருக்கும் வேடனின் கூண்டில் நான் சிக்கிக் கிடக்கிறேன். வேடன் நம் மரத்தைச் சரணடைந்து பசியும், குளிரும் வருத்த வாடிக் கிடக்கிற அவனுக்கு உதவுவது நம் கடமை” என்கிறது.

‘மனைவி சொல்லே மந்திரம்’ என்று போற்றி வாழ்ந்த ஆண் புறா வேடனிடம் ‘வெட்ட வருபவனுக்கு நிழல் தரும் மரம் தான் எங்கள் வீடு. என் மனைவியை நீ கூண்டில் அடைத்திருந்தாலும், சரணம் என்று இந்த மரத்தை அடைந்த உனக்கு உதவுவது என் கடமை உனக்கு இப்போது என்ன வேண்டும்?’ என்றது. வாடையில் வருந்திய வேடன் “குளிர்காய நெருப்பு வேண்டும்” என்றான். ஆண்புறா அலைந்து திரிந்து சருகுகளைச் சேகரித்து வந்து வேடன் எதிரில் குவித்து, ஒரு கொல்லன் வீட்டில் எரிந்து கொண்டிருந்த கட்டையைக் கவ்விக்கொண்டு வந்து தீ மூட்டியது. குளிர்காய்ந்த வேடன் “பசிக்கிறதே” என்றான். அவனது பசியைப் போக்க எதுவும் இல்லையே என்று யோசித்த ஆண் புறா ‘என்னையே உனக்கு உணவாகத் தருகிறேன்” என்று கூறி தீயில் விழுந்தது.

புறாவின் வாழ்க்கை புனிதமானது. புறா கட்டுவது கூடு என்றாலும் மாட மாளிகைகள் தேடி நெடிய கோபுரங்கள் என்று உயரத்திலே கட்டும் எண்ணங்கள் எப்போதும் உயர்வாக இருக்க வேண்டுமென்பதற்கு புறா நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. புறா இரண்டு முட்டைகள் மட்டுமே இட்டு, இரண்டையும் அடைகாத்து குஞ்சுகள் பொரிக்கும். அளவான குடும்பம், ஆனந்தமான குடும்பம் என்கிற குடும்பக் கட்டுப்பாட்டுக்கு புறா முன்னுதாரணம்.

மகாபாரதம் காட்டும் இந்தப் புறா நமக்குப் புகட்டும் ஞானம் பெரியது. ‘மற்றவர் பசி போக்க தன்னையே மாய்ப்பது தகும்’ என்கிற உரத்த சிந்தனை உள்ளத்துடன் பிறருக்கு உதவியாக இருக்கும் பண்புடைமையிலிருந்து பிறந்ததுதான் விருந்தோம்பல். புறாவின் விருந்தோம்பலைக் கேட்கிற நெஞ்சம் நெகிழ்கிறது. நன்றியைப் போற்றுவதும் நல்ல புறாக்களே, வேடனிடமிருந்து ஓர் எறும்பு புறாவைக் காப்பாற்றியது. காப்பாற்றிய அந்த எறும்பு ஒருநாள் வெள்ளத்தில் தண்ணீரில் மிதந்ததைப் பார்த்தது. மரத்திலிருந்து புறா இலையைக் கிள்ளி படகாய் மிதக்க வைத்தது எறும்பைக் கரை சேர்த்தது. உதவி செய்தவரை என்றைக்கும் மறக்கக்கூடாது என்பதை இந்தப் பஞ்சதந்திரக் கதையில் புறா நம் ஒவ்வொருவருக்கும் உணர்த்துகிறது. புறாக்களைத் தேடத்தேட சிறகுகள் விரிக்கின்றன. இந்தப் புறாக்கள் மணிப்புறாக்கள், மாடப்புறாக்கள், அத்தனையும் தாண்டி சமாதானப் புறாக்களாய் அன்பு என்று பாடும் அமைதிப் புறாக்களாகின்றன. கொத்துவதற்கு அலகிருந்தும் கொத்தாத அகிம்சைப் புறாக்கள்! இந்தப் புறாக்கள் சத்தமிட்டால்கூட சமாதானம் இருக்கும். இது எச்சமிட்டால் வெள்ளையாய் இருக்கும். காரணம் வெள்ளைப் புறா தூய்மைப் புறா.

நமது மரணமும் இந்தப் புறாவின் பயணமாய் அமையட்டும். இரண்டு சிறகுகள் நமக்குள் இருக்கின்றன. ஒன்று நமது பெற்றோர்கள், மற்றொன்று நமது வழிகாட்டிகள். நாம்தான் பறவையின் உடல் பகுதி. இந்த இரண்டு சிறகுகளைப் பொருத்திக்கொண்டு சிறகை விரித்தால் சிகரங்களைத் தொடலாம். புறாவின் உயர்ந்த மனதைப் போல் நமது வாழ்வையும், தாழ்வையும் நமது மனமே தீர்மானிக்க நமக்குள் உறைந்திருக்கின்ற நமது நினைவை உயர்வாக வைத்து செயல்படுவோம். “புறாக்களைப்போல கபடு அற்றவர்களாய் இருங்கள்” என்ற (மத் 10:16) நற்செய்தியை நமது வாழ்வாக்குவோம். நமது வாழ்வின் வளம் கூடும்.




**யோ**காவின் அடிப்படைக் கோட்பாடு மனதைக் கட்டுப்படுத்துவது. யோகா ஆன்மீகமும், உடற்பயிற்சியும் கலந்த, விஞ்ஞான ரீதியான, மனதுக்கு வலிமை தரும் ஒரு வாழ்க்கைக் கலை.

பெண்கள் இயற்கையிலே மென்மையானவர்கள். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் சுமக்க வேண்டிய சுமைகள் பாரம் மிக்கவை. குழந்தைப் பேறு ஒரு பெரிய பொறுப்பு. மாதவிடாய் சுழற்சிகள். பேறு கால உபாதைகள், குடும்பப் பொறுப்பு இவற்றைத் தாங்கும் சுமை தாங்கிகள்தான் பெண்கள்.

டாஸ்மாக் செல்வாக்கு அபரிமிதமாய் வளர்ந்திருக்கும் இக்கால கட்டத்தில் சலம்பல் செய்யும் கணவரைச் சமாளிப்பது ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் மிகப்பெரிய பிரச்சனையாகும்.

குழந்தைகளை மட்டுமல்ல, வயதானவர்களையும் கவனிக்க வேண்டும் என்கிற பொறுப்பு ஒரு பெண்ணிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பெண்கள் தங்கள் மேல் ஏற்றப்பட்டிருக்கும் சுமைகளைச் சுமக்க நல்ல ஆரோக்கியம் அவசியம். நல்ல மனபலமும் தேவை.

சுகத்தையும், மனோபலத்தையும் வழங்கக் கூடிய ஒரே ஆயுதம் யோகா ஒன்றுதான். பெண்கள் அதிக அளவில் யோகாவைப் பயில்வதில்லை. 06ம் பக்கம் பார்க்க......

## நம்பிக்கையும் வெளிப்பாடுகளும்.... 4ம் பக்கத் தொடர்ச்சி

குழு அளவில் தான நடைபெறுகின்றதேயன்றி, தனி நபர் அளவில் நடைபெறுவதில்லை.

இதற்கு நேர்மாறாகச் சில கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் ‘நான் கடவுள் மீது நம்பிக்கை கொள்கின்றேன்’, ‘நான் என் வட்டிலேயே செபித்துக் கொள்கின்றேன்’ ‘செபம என்பது எனக்கும், கடவுளுக்கும் இடையிலானது’, எனக்கு மற்றவர்களைப் பற்றிக் கவலை இல்லை’, ஆலயத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை’ என்பது இவர்களது வாதம். இது முழுக்க தனிநபர் அளவிலான இறை நம்பிக்கை. இது வெகு நாளைக்குத் தாக்குப் பிடிக்குமா என்பது சந்தேகம்தான்.

தொடர்ச்சியாக ஆலயத்திற்கு வந்து கொண்டிருந்த கிறிஸ்தவர் ஒருவர் திடீரென்று ஆலயத்திற்கு வருவதை நிறுத்திவிட்டார். சில வாரங்கள் கழித்து அவர் வீட்டு வழியாகச் சென்ற பங்குத்தந்தை அவருடைய வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசும்போது, ஆலயத்திற்கு வராததற்கான காரணத்தைக் கேட்டார். அப்போது அந்த நபர் “ஆலயத்திற்கு வந்து குழுவாகச் செபிப்பதைவிட வீட்டில் தனியே அமர்ந்து செபிப்பதே நல்லது” என தனக்குத் தெரிவதாகக் கூறினார்.

குருவானவர் உடனடியாகப் பதில் ஏதும் சொல்லவில்லை. அருகில் விறகு அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. நிறைய விறகுகள் அடுக்கப்பட்டு தீ மளமளவென்று எரிந்து கொண்டிருந்தது. குருவானவர் அதிலிருந்து ஒரு விறகை மட்டும் எடுத்து வெளியே வைத்தார். கொஞ்ச நேரம் எரிந்தபின் அந்த விறகு அணைந்து போனது. ஆலயத்திற்கு வராத நபருக்கு குருவானவர் சொன்ன மறைமுகச் செய்தி புரிந்து விட்டது. தொடர்ந்து ஆலயத்திற்கு வருவதாக வாக்களித்தார்.

தனியாகச் செபிக்கும்போதும், செயல்படும் போதும் நமக்குள் இருக்கும் ஆர்வம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போவது இயல்பு. இதைத் தடுக்க குழுவாக இணைந்து செபித்து நம் நம்பிக்கையை ஆழப்படுத்திக் கொள்வது அவசியம். எனவே, குழுவோடு இணைந்து செபிப்பதும், நம் இறை நம்பிக்கையை அறிக்கையிடுவதும் நம்மைத் தாங்கிப் பிடிக்க வல்லதாக இருக்கிறது. வாழ்க்கையின் பிரச்சனைகளில் தாக்குப்பிடிக்க உதவுகின்றது.

இந்த இரண்டு வகையான இறை நம்பிக்கைகள் - தனிப்பட்ட அளவிலான இறை நம்பிக்கை மற்றும் குழு அளவிலாக இறை நம்பிக்கை - ஒன்றையொன்று வளப்படுத்த வேண்டும்.

குழுவோடு இணைந்து நான் அறிக்கையிடும் இறைநம்பிக்கை கடவுளுக்கும், எனக்குமிடையேயான தனிப்பட்ட உறவை ஆழப்படுத்த வேண்டும். அதேபோல நான் தனிப்பட்ட அளவில் கடவுள்மீது கொண்டுள்ள இறை நம்பிக்கை, பங்கு கிறிஸ்தவ சமூகத்தோடு இணைந்து குழுவாக செபிப்பதில் முழுமை யாக வெளிப்பட வேண்டும். இது இறை சமூகம் இன்னும் ஈடுபாட்டோடு செபிக்க உதவியாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண நல்வாழ்த்துக்கள்

## இல்லற வாழ்வின் யூபிலி



"இனி அவர்கள் இருவர் அல்ல
ஒரே உடல். எனவே கடவுள்
இணைத்ததை மனிதன்
பிரிக்காதிருக்கட்டும்"
மத் – 19:6

இந்நாள் வரை இனிதே
காத்த இணையிலா
இறைவன்
இனிவரும் எந்நாளும்
காத்து ஜம்பதின்
பொன் விழாக் காணும்
நற்பேறு நல்கும் வரமருள
இறைவனை
இறைஞ்சுகின்றோம் யாம்

**சிந்தாத்துரைநாதர் – கலாஜினி**
**(குணராசா – ஜெயந்தி)**
**14.06.1989 - 14.06.2014**

அன்புடன் வாழ்த்தும்
சகோதரி
அ. செல்வம் குடும்பத்தினர்

மாரீசன் கூடல்
இளவாலை.

Ad - 43/14



# யூபிலி நாயகனே வாழ்க!



அன்னையவள் கருவினில் அற்புதமாய்
அன்ரனிபாலா நாமமுடன் அவனிதனில்
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து இரண்டினில்
ஆண்டவர் பணிக்காய் அன்றே அவதரித்தீர்

ஊறணி மண் தந்த குறும்புக்காரனாய்
ஊன்றியே வளர்ந்தீர் ஆன்மீகத்தில்
ஆர்வமுடன் கல்விகற்கையில் தந்தையைப் பிரிந்தீர்
அர்ப்பணப் பயணமதில் தாயையும் இழந்தீர்

கலப்பையில் கைவைத்தவன் திரும்ப
உலகை நோக்குவது சீடத்துவம் அல்ல
எதிர் நீச்சலுடனே இறையாட்சிக் களத்தில்
கதிர் அறுக்கும் புறப்பாட்டில் கல்லகள் பல பயின்றீர்

இயேசுவின் தாசனாய் 1989 தனில்
இனிதே அடியெடுத்து வைத்தீர் பணிக்குருத்துவமதில்
இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாஞ்சையுடன்
இறையரசின் உண்மைகளை விதைத்தீர்

எத்தனை இடர்கள் எத்தனை தடைகள்
அத்தனையும் ஆண்டவன் கரம் பற்றியே
சத்திய நெறியால் சாத்தானின் சோதனை வென்று
உத்தம குருத்துவ வாழ்விற்கு சான்றானீர்

இன்முகத்துடன் 2011 தனில் பணியேற்று
இணையற்றசேவைக்காய் இணைத்தீர் எம்முடனே
அன்பிய வாழ்வினை அகத்தினில் ஊட்டி
அன்பின் நற்கருணைப் பிரசன்னத்தில் வாழ்வித்தீர்

வெள்ளிவிழாக் காணும் அருளின் ஆண்டிலே
துல்லியமாய் துலங்கட்டும் உம் பணிகள்
விசுவாசக் காவலனாய் ஆண்டுகள் பலவிளங்கி
வீறுநடை போட்டிடுவீர் விண்பாதையில்

அச்சுவேலிப் பங்கின் தந்தையே!
அச்சமின்றி எடுத்துரைப்பீர் நற்செய்திதனை
பட்சமுடன் வாழ்த்துகின்றோம் பா தொடுத்து
பாரினில் பல்லாண்டு வாழ்கவே யூபிலி நாயகனே!

— அச்சுவேலி பங்கு மக்கள் —


# ஓர் இனிய மது.. 3ம் பக்கத் தொடர்ச்சி

பரிசுத்த ஆவியானவரின் அருட்பொழிவு ஏன் யூதர்களின் பெந்தகோஸ்து திருவிழா அன்று பார்த்து நடக்க வேண்டும். இது எதேச்சையாக நடந்த ஒரு நிகழ்வா? இல்லை, மீட்பு வரலாற்றில் எந்த ஒரு சிறு சம்பவமும் எதேச்சையாக நடப்பதில்லை. எல்லாவற்றையும் கடவுள் ஒரு தெளிவான திட்டத்துடனே நிகழ்த்துகிறார். ஒவ்வொன்றிக்கும் ஓர் உள்ளார்ந்த அர்த்தம் உண்டு. யூதர்களின் பெந்தகோஸ்து திருவிழாவிற்கும், மரியா மற்றும் திருத்தூதர்கள் மீது ஆவியானவர் இறங்கி வந்ததற்கும் இடையில் குறியீடுகள் அடிப்படையில் நிறைய ஒற்றுமைகள் உள்ளன. அவற்றைக் குறித்து விரிவாகப் பார்க்கலாம்.

முதலில், யூதர்களின் பெந்தகோஸ்து திருவிழாவைப் பற்றிப் பார்ப்போம். "பெந்தகோஸ்து" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? இது நிறையப் பேருக்குத் தெரிந்த விஷயம்தான். 'பெந்தகோஸ்து' என்றால் 'ஐம்பதாவது நாள்' என்று பொருள். பாஸ்கா திருவிழாவுக்கு அடுத்த ஐம்பதாவது நாள் இந்தத் திருவிழா கொண்டாடப்பட்டதால் இந்தப் பெயர். எருசலேமிலிருந்து 20 மைல் தொலைவிற்குள் வசிக்கும் எல்லா யூதர்களும் மூன்று திருவிழாக்களுக்கு கட்டாயம் எருசலேமுக்கு வரவேண்டும் என்ற நியதி இருந்தது. பாஸ்காத் திருவிழா, பெந்தகோஸ்து திருவிழா மற்றும் கூடாரத் திருவிழா.

ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில் பாஸ்கா திருவிழா கொண்டாடப்பட்டது. பெந்தகோஸ்து யூன் மாதத் துவக்கத்தில் வந்தது. இந்த விழாவிற்கு இரண்டு முக்கிய பின்புலங்கள் இருந்தன. ஒன்று, வரலாற்றுப் பின்புலம். யாவே கடவுள் சீனாய் மலையில் மோசேயிடம் பத்துக் கட்டளைகள் தந்ததைத்தான் பிரதானமாக இன்றைக்கு இஸ்ரயேல் மக்கள் நினைவுகூர்ந்தார்கள். இரண்டாவது, விவசாயப் பின்புலம். பெந்தகோஸ்துவிற்கு 'அறுவடைத் திருவிழா' என்ற ஒரு பெயரும் உண்டு. ஏனெனில், அந்த நாளில் அந்த ஆண்டு விளைச்சலின் முதற்கனிகளை ஆண்டவருக்குக் காணிக்கையாக இஸ்ரயேல் மக்கள் கொடுத்தார்கள். கொண்டாடும் முறையிலும் இரண்டு விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று, பெந்தகோஸ்து அன்று யூதர்கள் தங்கள் வீடுகளை பசுமையான செடி, கொடிகளைக் கொண்டு அலங்காரம் செய்தனர். அது கடவுள் கொடுத்த சட்டமே அவர்களுக்கு வாழ்வு தரும் மரம் (Tree of Life) என்பதை குறிப்பாக உணர்த்தியது. இரண்டாவதாக, அன்றைக்கு யூதர்கள் பாலாடைக் கட்டிகளை முக்கியமாக உண்டனர். அது கடவுள் கொடுத்த சட்டமே அவர்களின் 'பாலும், தேனும்' என்பதைக் குறிப்பால் உணர்த்தியது.

இந்த யூதக் கலாசாரக் கூறுகளைப் பின்னணியாகக் கொண்டு நம் பெந்தகோஸ்து திருவிழாவை உற்றுப்பாருங்கள். அது பல அடுக்கு அர்த்தங்களைக் கொடுக்கும்.

1. அப்போஸ்தலர்கள் குழாம் கூடியிருந்த எருசலேம் வீடுதான் புதிய சீனாய் மலை. இங்கே ஆண்டவர் கட்டளைகள் ஏதும் தரவில்லை. மாறாக ஆவியைத் தருகிறார். எது சரி? எது தவறு? என்பதை இனி சட்டம் அல்ல; பரிசுத்த ஆவியானவரே தீ[illegible]னிப்பார். யூதர்கள் தங்கள் சமூக, சமய, பொருளாதார வாழ்வின் reference point - ஆக யாவே கொடுத்த சட்டத்தையே வைத்திருந்தார்கள். இனி ஆவியானவர் அந்த இடத்தில் இருப்பார். அவரே நம் ஆலோசனை மையம். ஏனெனில் நீங்கள் பேச வேண்டியவற்றை தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார் (லூக் 12:12)

2. யூதர்களின் பெந்தகோஸ்து ஓர் அறுவடைத் திருவிழா. அது நிலத்தின் அந்த ஆண்டு விளைச்சலைக் கொண்டாடியது. பரிசுத்த ஆவியானவரின் வருகை ஒரு புது விதமான அறுவடையை திருச்சபைக்காக நிகழ்த்திக் காட்டியது. திப 2:41 இல் வாசிக்கின்றோம். பெந்தகோஸ்து நாள் அன்று மட்டுமே பேதுருவின் அருளுரையைக் கேட்டு, ஏறக்குறைய மூவாயிரம் பேர் விசுவாசததிற்குள் வந்து திருமுழுக்குப் பெற்றார்கள். இந்த விசுவாச அறுவடை சாத்தியமானது பேதுருவால் அல்ல, ஆவியானவரால்.

3. பெந்தகோஸ்து தினத்தன்று யூதர்கள் தங்கள் நிலத்தின் முதற் கனிகளை ஆண்டவருக்கு படையல் செய்தார்கள். கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களின் விசுவாசத்திற்குப் பரிசாக, முதற்கனியாக ஆண்டவரே அவர்களுக்குத் தூய ஆவியைத் தருகிறார்.

4. யூதர்கள் சட்டம்தான் தங்கள் வாழ்வின் வளமைக்கு ஆதாரம் என்று நினைத்தார்கள். புதிய பெந்தகோஸ்துவில் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்தவர்கள் வாழ்வில் பசுமையாக இருப்பார். அவர்களின் ஆன்மீகப் பசியைப் போக்கும் பாலும், தேனுமாகவும் இருப்பார்.

5. யூதர்களின் பெந்தகோஸ்து திருவிழா யூன் மாதத்தில் நடைபெற்றது. பயணம் செய்வதற்கு ஏதுவான தட்பவெப்ப சூழ்நிலை கொண்ட மாதம் அது. அதனால் பல நாட்டு வியாபாரிகள், பயணிகள் அந்த யூன் மாதத்தில் எருசலேமில் இருப்பது வழக்கம். திப 2:9-10ஐ வாசித்துப் பாருங்கள். பல நாட்டு மக்கள் இங்கே கூடுகிறார்கள். பெந்தகோஸ்து திருவிழா இப்படிப் பல்வேறு நாட்டினரை, இனத்தவரை எருசலேமில் ஒன்றுகூட்டும் ஒரு மையத்திருவிழாவாக இருந்தது. அதே காரியத்தை பரிசுத்த ஆவியானவரும் செய்வார். உலகத்தின் பல மூலைகளிலும் வாழும் எல்லா மக்களையும் இயேசு என்னும் ஒரே குடையின் கீழ் அவர் ஒன்றிணைப்பார். அதற்கான ஆரம்ப அடையாளங்களை நாம் திப 2:11-12இல் ஏற்கனவே பார்க்கிறோம். பல்மொழி பேசும் மக்கள், திருத்தூதர்களின் உரையை தங்கள் மொழியிலேயே புரிந்து கொண்டார்கள். பரிசுத்த ஆவி இருக்கும் இடத்தில் குழப்பத்திற்கு இடம் இல்லை. நல்ல புரிதல் மட்டுமே அங்கு இருக்கும். ஆவியானவரிடத்தில் பிரிவினைக்கு இடம் இல்லை. அவர் உலகின் ஒருங்கிணைப்பாளர்.

**பெந்தகோஸ்து திருவிழா ஒரு புதுயுகத்தின் ஆரம்ப நாள்!**

**பெண்கள் யோகா...** 5ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் இந்த நிலைமை இப்போது மாறி வருகிறது. பெண்கள் யோகாசானங்கள் கற்றுக் கொள்வதில் எந்தவிதமான தடையும் இல்லை.

பெண்களானாலும் சரி, ஆண்களானாலும் சரி. திறமையான ஆசிரியரிடம் யோகா பயில்வது அவசியம். யாரும் புத்தகத்தைப் பார்த்து யோகா பயிலக்கூடாது. பெண்களுக்குச் சொல்லிக்கொடுக்கும் யோகா ஆசிரியர் ஒரு பெண்ணாக இருந்தால் மிகவும் நல்லது.

யோகாசானங்கள் மெதுவாகச் செய்யப்படுவதால் உடலில் வலிகள். காயங்கள் ஏற்படாது. யோகா டென்ஷனைக் குறைப்பதால் வேலைக்குப் போகும் பெண்கள் அவசியம் யோகா கற்க வேண்டும். பருமனாக இருக்கும் பெண்கள் யோகா செய்து எடையைக் குறைத்துக் கொள்ளலாம். பெண்களை அதிகம் தாக்கும் ஆர்த்ரைட்டிஸ், தலைவலி, உயர் இரத்த அழுத்தம். மாதவிடாய்க் கோளாறுகள், முதுகு வலி போன்றவற்றுக்கு ஆசனங்கள் ரொம்பப் பயனளிக்கின்றன. கோபம், எரிச்சல், பலவீனம் போன்ற உபத்திரவங்கள் இந்த ஆசனங்களால் நீக்கமடைகின்றன. வேலைக்குப் போகும் பெண்கள் பிராணயாமம் பயிற்சி செய்தால் ஸ்ட்ரெஸ், மனச் சோர்வு, கழுத்து வலி (ஸ்பான்டிலோஸிஸ்) போன்ற உபாதைகளை நீக்கிக் கொள்ளலாம். எனவே, வேலைக்குச் செல்லும் பெண்களாய் இருந்தாலும், வீட்டில் இருக்கும் பெண்களாக இருந்தாலும், தங்களுக்கென்று தகுதியான ஒரு யோகா ஆசிரியரிடம் தங்களுக்குத் தேவையான சில யோகாசானங்களைக் கற்று, அன்றாடப் பயிற்சி செய்து வந்தால் அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களை நீக்கி, சுகமான வாழ்வு வாழலாம்.

**S. சதானந்தம்.**


# விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவு



மலர்வு
1926.02.14

உதிர்வு
2012.06.03

**அமரர். யோசேப் பேரின்பம்**

"வாழ்விலே உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"

அழகான பூ முகம் அன்பான உள்ளம்
கொண்ட உம்மை என்றும் மறவோம்
இரக்கம் நிறைந்த இறைவா உம் அடியானாகிய
இவர் செய்த குறை குற்றங்களை மன்னித்து
உம் அரவணைப்பில் இவரை சேர்த்தருளும்.

இராஜ வீதி,
கோப்பாய் தெற்கு,கோப்பாய்.

அன்புடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்.

Ad - 41/14



# விண்ணக வாழ்வில் 44ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்
06.10.1962

விண்ணுலகில்
26.06.1970

"சீவியத்தில் உங்களை
நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

**செல்வி. மிரியம் ஷாமினி**

உங்கள் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

சுருவில்.

Ad - 42/14



# நீங்காத நினைவுகளுடன்

33வது ஆண்டு 19வது ஆண்டு





| யோசப் சத்தியநாதன் [டேவிட்] | | சத்தியநாதன் அந்தோனியாப்பிள்ளை |
|---|---|---|
| 15.09.1927 | அன்னைமடியில் | 02.06.1936 |
| 23.06.1981 | ஆண்டவன்அடியில் | 13.04.1995 |

"நீதியுள்ள ஆண்டவர் நேரிய செயல்களை விரும்புகின்றார்
அவர் தம் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர்" தி.பா. 11-7

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு
அன்புடன் கேட்கின்றோம்.

163, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

மகள்
ஐடா மரியதாஸ்.

Ad - 44/14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் அறிகுறிகளை உய்த்துணருமா திருச்சபை?

**அலசலும் உரசலும் 11**

**அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.**

**(சமகால சமூக ஆன்மீகத் தொடர்)**

இன்றைய நவீன மாற்றங்கள் மத்தியில் திருச்சபை தன்னை சுய ஆய்வு செய்து புதுப்பித்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது. திருச்சபையின் அமைப்புக்களில் மட்டுமல்ல, அதன் வாழ்விலும் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. உலகெங்கும் நற்செய்தியை பறைசாற்ற வேண்டுமென்ற நற்செய்தி கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருந்தாலும் உலகத்தில் அமைதியை ஒற்றுமையை ஏற்படுத்த தலைமைத்துவம் வழங்க வேண்டியதும் முக்கியமானதாகும். இன்றைய உலகின் ஏக்கங்களை கவலைகளை உள்வாங்கி திருச்சபை புளிக்காரமாக உலகத்தின் மத்தியில் செயற்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய பணிக்கு இன்றைய திருத்தந்தை ஒரு பாரிய வழிகாட்டலை வழங்கி வருவது மெச்சத்தக்கதாகும். அண்மையில் பாலஸ்தீனிய, அரசுத்தலைவர்களை வத்திக்கானுக்கு வரவழைத்து முதன்முறையாக இஸ்லாமிய வழிபாடு நடாத்த அனுமதித்தது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அமைதி முயற்சிகளுக்கு துணிச்சலான முறையில் கத்தோலிக்க திருச்சபையின் பாரம்பரியங்களைக் கடந்து செயற்பட்டமை திருச்சபை இயேசுக்கிறிஸ்துவின் சாட்சியப் பணிக்கு உலகெங்கும ஒரு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது எனலாம். திருச்சபை தன் இருப்பின் எல்லைகளைக் கடந்த (Cross border) நற்செய்திப்பணிக்கு தயாராகி வருகின்றது என்பதை அண்மைக்கால திருத்தந்தையின் செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

### திருச்சபை ஆடம்பர மாயையிலிருந்து எளிமைக்கு

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து கிறிஸ்துவின் மேல் கட்டியெழுப்பப்பட்ட திருச்சபை பயணம் செய்யும் திருச்சபையாக நற்செய்திப் பணியை ஆற்றி வருகின்றது என்பதில் சந்தேகமில்லை. இயேசுவின் எளிமையான வாழ்வைப் பின்பற்றி ஊழியன் (Servant) என்ற மனநிலையில் தாழ்ச்சியோடு பணி செய்ய வேண்டியது திருச்சபையின் தலையாய கடமையாகும். இயேசுவின் பணிக்காலத்தில் தலைசாய்க்க இடமில்லாதவராக ஒரு தெரு மனிதனாகவே தன்னை அடையாளப் படுத்திக் கொண்டார். பணிவிடை பெறவல்ல பணிவிடை புரியவே தான் வந்ததாகவே தன் நோக்கத்தைத் தெளிவுபடுத்தி வாழ்ந்தார். இத்தகைய மனநிலையில் வாழ இன்றைய திருத்தந்தை அனைவருக்கும் தனது சாட்சிய வாழ்வின் மூலம் வழிகாட்டி வருகின்றார் என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். இன்றைய திருச்சபைத் தலைமைகளும், பணியாளர்களும் எளிமையான வாழ்வின்மூலம் இறைமக்களுக்கு வழிகாட்ட வேண்டிய நிலையில் உள்ளனர். குறிப்பாக தொடர்பாடல் சாதனங்களின் பெருக்கம் அருட்பணியாளர்களிலும் செல்வாக்குச் செலுத்தும் அளவிற்கு சென்றுவிட்டது. திருச் சபை கட்டுக்கோப்பான, ஒன்றிணைந்த இறுக்கமான அமைப்பை (நிர்வாக) கொண்டுள்ளது என்பதில் இரு கருத்து இருக்க முடியாது. இன்று வெளியரங்க வாழ்விலும் திருச்சபைத் தலைமைகளிடம் எளிமை எதிர்பார்க்கப்படுகின்றது. ஆடம்பர மனநிலைகளை (triumphalistic) துறந்து எளிமையான வாழ்க்கை முறை மூலம் சாட்சியம் பகர அழைக்கப்படுகின்றனர். அண்மைய தகவல்களின்படி கத்தோலிக்க திருச்சபையி லிருந்து தூரப் போனவர்கள் திருத்தந்தையின் வாழ்க்கையினால் கவரப்பட்டு மீண்டும் திரும்பி வருவதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய சாட்சியமான எளிமையான வாழ்வே திருச்சபையை ஏழ்மை திருச்சபையாக (Church of the Poor) மாற்ற முடியும்.

### ஏழ்மைத் திருச்சபையாக மாற வேண்டும்

இன்றைய திருத்தந்தையின் வழிகாட்டல்களும் சிந்தனைப்போக்கும் ஒரு எளிமையான திருச்சபையாக உருமாற்றும் முயற்சிகளாகவே அமைகின்றது. இதற்கு அடிப்படையாக அமைவது திருச்சபையின் தலைவரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையும் போதனைகளும் என்று சொன்னால் மிகையாகாது. இயேசு அமைப்புக்களை சட்டங்களை ஒரு போதும் எதிர்த்தது கிடையாது. ஆனால் அவற்றின் நோக்கமும் இலக்கும் மனிதனுக்கு விடுதலை வாழ்வைக் கொடுப்பதாக அமைய வேண்டும் என்பதில்தான் உறுதியாக செற்பட்டார். ஏழ்மை என்பது பல்வேறு நிலைகளில் புரிந்து கொள்ளப்படலாம். விவிலியத்தில் இறைவனை மட்டும் சார்ந்து வாழும் ஏழ்மை மக்களை (Anawim) குறித்து நின்றது. இன்றைய சூழலில் பொருளாதார வசதி இல்லாதவர்கள், ஆன்மீக வறட்சியில வாழ்பவர்கள், ஒடுக்கப்படுபவர்கள் உறவு சொல்ல குரல கொடுக்க யாருமே இல்லாதவர்களையும் இந்த ஏழ்மைப் பிரிவிற்குள் உள்ளடக்கலாம். நிறைவான வாழ்வை வாழத்தடையாயிருக்கும் அனைத்தையும் நீக்க திருச்சபை இத்தகைய ஏழ்மை உள்ளவர்களோடு சேர்ந்து வாழ்விற்காக விடுதலைக்காக உழைக்கின்ற போதே ஏழ்மைத் திருச்சபையாக மாறுகின்றது. முழுமையான வாழ்வை வாழ முடியாது துண்டுறும் அனைவரினதும் ஏக்கங்களை கவலைகளை பகிர்ந்து வாழும் திருச்சபையாக மாறுகின்றபோதே இறையரசு மலருகின்றது. இறைவனின் ஆட்சி இறைமக்கள் மத்தியில் வளர்கின்றது. ஏழைகளோடு தன்னை இணைத்துக் கொள்ள திருச்சபையின் திருநிலையினரின் மனநிலைகளிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். மனமாற்றம் இறைமக்களுக்கு மட்டும் உரித்தானதல்ல. அது திருநிலையினரிடமிருந்து தொடங்க வேண்டும். இதுவே திருச்சபையின் சாட்சிய வாழ்விற்கு வழிசமைக்கும்.

### தொண்டன் மனநிலையில் [servant] தொண்டாற்ற

இன்று நாம் வாழும் சமூகத்தில் வன்முறைகளின் பெருக்கம் சமூகத்தை, கலாசாரத்தை சீரழித்து விடுகின்ற இத்தகைய நாசகார வேலைகளின் கருவிகளாக குண்டர்கள் (gundas) செயற்படுகின்றார்கள். இவர்களது பெருக்கம் அழிவிற்கு காரணமாக அமைந்து விடுகின்றது. இத்தகைய பின்புலத்தில் மக்கள் மத்தியில் பணியாற்றும் அருட்பணியாளர்கள் வன்முறையாளர்களைப் போல சர்வாதிகாரிகளாக குறுநில மன்னர்களாக செயற்பட முடியாது. இயேசுவின் மனநிலையில் எளிமையான பணியாளருக்குரிய தாழ்ச்சியான மனநிலையில் செயற்படுவது சாட்சிய வாழ்விற்கு வழிவகுக்கும் பணியாளர்கள் நல்ல நிர்வாகிகளாக (Administrators) செயற்பட பணிக்குருத்துவத்திற்கு இறைவனால் அழைப்புப் பெறவில்லை என்பதை உணருவது அவசியமாகும். இத்தகைய ஏழ்மையான மனநிலைகளோடு இணைந்த செயற்பாடுகளின் மூலமே ஏழ்மைத் திருச்சபையாக இறைமக்களை வழிநடத்திச் செல்ல முடியும். பணிக்குருத்துவம் இறைவனின் கொடை என்பதை உணர்ந்து, இறைவனைக் கொடுக்கும் அருள்பணியாளர்களாக மாற வேண்டும். எமது திருத்தந்தை கூறுவது போன்று நல்ல நிர்வாகிகளைவிட நல்லாயனாகிய கிறிஸ்துவைப்போன்ற இரக்கம், கருணை நிறைந்த நல்ல மேய்ப்பர்களே தேவை என்று வலியுறுத்துகின்றார். இன்று திருச்சபையின் அமைப்புக்கள் புதுப்பிக்ப்பட வேண்டும். திருச்சபையிலும் அரசியல் மனநிலைகள் நுழையாதவாறு கிறிஸ்துவின் மனநிலையால் வழிநடத்தப்படும் முனைப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையெனில் திருச்சபையும் உலகியல் ரீதியான அரசியல் சார்ந்த அமைப்பாகவே மாறிவிடும். இத்தகைய மனநிலைகளிலிருந்து வெறுமையான எளிமையான திருச்சபையாக மாற்ற வேண்டுமென்பதே திருத்தந்தையின் கனவாகும். திருச்சபையின் தலைமைத்துவம் ஊழியன் (servant) என்ற அடித்தளத்திலேயே விளங்கிக்கொள்ளப்பட வேண்டும். திருச்சபை சார்ந்த கட்டிடங்களும் அமைப்புக்களும் வாழ்வை பறைசாற்றுவதாக அமைய முடியாது. அதனுடைய எளிமையான வாழ்க்கை முறைகள், அரசியல் கலப்பற்ற இயேசுவின் மனநிலைகளில் ஊன்றிய செயற்பாடுகளே திருச்சபைக்கு வலுவூட்ட முடியும். இதுவே காலத்தின் எதிர்பார்ப்பாகும்.

(உரசல் தொடரும்....)

# வாங்க சிரிச்சிட்டு போகலாம்

**இளசை சுந்தரம்**



வாத்தியார், "உலகப்படத்திலே அமெரிக்கா எங்கே இருக்கு? காட்டு" ன்னார். அவன் கரெக்டா வந்து காட்டிட்டான். அப்புறம் வாத்தியார் இன்னொரு பையன்கிட்டே, அமெரிக்காவைக் கண்டுபிடிச்சது யார்?ன்னு கேட்டார். உடனே அவன் 'டேவிட் சார்;'ன்னு பதில் சொன்னான். வகுப்பறையே குலுங்கியது.

அறிவியல் வகுப்பிலே மெழுகு வர்த்தியைப் பொருத்தி வச்சுகிட்டு ரொம்ப சிரத்தையா, 'இந்த மெழுகு வர்த்திக்கு ஒளி எங்கே இருந்து வந்ததுன்னு சொல்ல முடியுமான்னு கேட்டார் ஆசிரியர். ஒரு பையன் வேகமா எழுந்து வந்து அதை ஊதி அணைச்சிட்டு, 'சார்! இப்போ இந்த ஒளி எங்கே போச்சுன்னு சொல்லுங்க. நான் எங்கே இருந்து அது வந்ததுன்னு சொல்றேன்"னான். இப்போ வாத்தியார் தலையைச் சொறிஞ்சார்.

கட்டுரை எழுதுவதிலும் நம்ம பையன்க சாமர்த்தியசாலிகள்தான். 'நான் அமைச்சரானால்.'ன்னும் தலைப்பு கொடுத்து உடனே கட்டுரை எழுதச் சொன்னார் வாத்தியார். எல்லாப் பையன்களும் வேக வேகமா எழுதினாங்க. ஒரு பையன் மட்டும் பேனா முனையை முகவாயிலிலே தட்டிக்கிட்டு யோசனை பண்ணிக்கிட்டிருந்தான்.

"ஏண்டா நீ இன்னும் எழுத ஆரம்பிக்கலையா' என வாத்தியார் கேட்டார்.

'சார்! மரியாதையா பேசுங்க. நான் இப்போ அமைச்சராகிட்டு இருக்கேன்' அப்படி என்றால் உடனே வாத்தியார் 'அப்படியா! சரி அமைச்சர் அவர்களே! நீங்கள் கட்டுரை எழுத ஆரம்பிக்கலாமே' அப்படின்னார்.

'அமைச்சரான பிறகு நான் எப்படி எழுதுவேன் என் பி.ஏ.வை வரச்சொல்லி இருக்கிறேன். அவர் வந்து எழுதுவார்' என்று ஒரு போடு போட்டான்.

இன்னொரு வகுப்பிலே 'கிரிக்கெட்' ஆட்டம் பற்றி கட்டுரை எழுதச் சொன்னார் வாத்தியார். ஒரு பையன் ரெண்டே ரெண்டு வரி எழுதி வாத்தியார்ட்டே நீட்டினான். அதிலே 'இன்றைக்கு மழை பெய்வதால் கிரிக்கெட் ஆட்டம் கிடையாது' என இருந்தது.

இப்படித்தான் பரீட்சையிலே ஒரு கேள்வி, இரண்டாம் குலோத்துங்க அரசனைப் பற்றி இரண்டு வரி எழுதுங்கன்னு. பையன் அதுபற்றி படிக்கலைன்னாலும் பக்குவமா இப்படிப் பதில் எழுதினான். இரண்டாம் குலோத்துங்க அரசன் முதல் குலோத்துங்க அரசனுக்குப் பின்பு பிறந்தவன்னு எழுதிட்டு. அடுத்த வரியில இரண்டாம் குலோத்துங்க அரசன் என்பவன் மூன்றாம் குலோத்துங்க அரசனுக்கு முன்பு பிறந்தவன். இதற்கு மார்க் போடுறதா, வேண்டாமான்னு வாத்தியார் தலையை பிச்சிக்கிட்டார்.

பேப்பருக்குக் கீழே 'பிட்' வச்சி ஒரு பையன் கொப்பியடிச்சிக்கிட்டு இருந்தான். வாத்தியார் பிடிச்சிட்டாரு. 'பேப்பருக்குக் கீழே என்ன வச்சிருக்கே'ன்னு கேட்டார். அவன் ரொம்ப சர்வ சாதாரணமா, சார் உங்களுக்கு இங்கே என்ன வேலை?ன்னு கேட்டான். 'சூப்பர் வைசர்'ன்னார். 'அப்படின்னா தமிழ்லே என்ன அர்த்தம் சார்?'ன்னு கேட்டான். 'மேற்பார்வையாளர்' அப்படின்னார். அதுக்கு அவன், 'அப்படின்னா நீங்க மேலே பார்க்க வேண்டியது தானே! ஏன் கீழே பார்க்கிறீங்க' அப்படின்னான். பிள்ளைகளோட அறிவுக்கூர்மையை அங்கீகரிக்கலைன்னா ஆபத்தாயிடும். பெற்றவர்களும், ஆசிரியர்களும் இவர்களிடம் உஷாரா இருக்கிறது நல்லது.

சின்ன வயசுப் பசங்க குறும்பு பண்றது இயல்புதான். ஆனா அது ஒரு எல்லையை மீறாமப் பார்த்துக்கணும்.

ஒரு பையன் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்து அப்பாவிடம் புகார் செய்தான். 'அப்பா! அடுத்த தெரு பையன் என்னை அடிச்சிட்டாம்பா.'

'எவண்டா உன்னை அடிச்சது? அவனை உனக்கு அடையாளம் தெரியுமா?'

தெரியும்பா! அவனுக்கு ஒரு காது இருக்காது."' அவனுடை ஒரு காது என்னடா ஆச்சி' 'நான் தான் அதைக் கடிச்சி கையிலே வச்சிருக்கேனே' ன்னான்.

இப்போது அப்பாவே அவனைப் பார்த்து நடுங்க ஆரம்பிச்சிட்டாரு.

ஒரு வீட்டிலே சாமிக்கு முன்னாடி பல காரங்களைப் படையல் போட்டிருந்தாங்க. சாமி கும்பிட்டு விட்டுப் பல காரங்களைச் சாப்பிட வேண்டும் என்பது திட்டம். ஒரு பையன் அவசரப்பட்டான். 'அம்மா! சாமி கும்பிட ரொம்ப நேரம் ஆகும் போலத் தெரியுது. இப்பவே எனக்குக் கொஞ்சம் பலகாரம் கொடேன்.

அய்யய்யோ அப்படியெல்லாம் செய்யக்கூடாது. சாமி கண்ணைக் குத்திடும்னு பதறினாள் அம்மா. அதெல்லாம் சாமி கண்ணைக் குத்தாது. நான்தான் ஏற்கனவே ரெண்டு லட்டு எடுத்து சாப்பிட்டுட்டேனேன்னான். இப்போது அம்மா என்ன பண்ணுவாள்?

ஒரு பையன் தன்னோட அக்காவிடம், 'அக்கா! உங்ககிட்ட கொடுக்கச் சொல்லி நிறையப் பேர் லவ் லெட்டரை என்கிட்டே தர்றாங்க. கூரியர் சர்வீஸ் மாதிரி அதுக்கு எல்லாம் நான் ஒரு ரேட் பிக்ஸ் பண்ணியிருக்கேன். நீங்க யாரையும் லவ் பண்ணாட்டியும் பரவாயில்லை. ஒவ்வொண்ணுக்கும் நாலைஞ்சு வரியிலே பதில் மட்டும் எழுதித் தந்துகிட்டு இருங்க. இந்த வயசிலே சம்பாதிக்க இது ஒரு நல்ல வழியாகத் தெரியுதுன்னு சொன்னான்.

இவனுக்காக அந்த அக்கா எத்தனை பேரைக் காதலிக்க முடியும்? அன்னைக்கு மெரீனா பீச்சிலே ஒரே கூட்டம் ஒரு பையன் எப்படியோ அப்பா அம்மாவை விட்டு மிஸ்சாயிட்டான். ஒரே அழுகை. அங்கே இருந்தவங்க எல்லாரும் அவனை சமாதானப்படுத்துறதுக்காக சாக்லெட், ஐஸ்கிரீம் வகைகளெல்லாம் வாங்கிக் குவிச்ச வண்ணம் இருந்தாங்க. எல்லாத்தையும் ஒரு கை பார்த்துக்கிட்டிருந்தான் அந்தப் பையன்.

ஒரு வழியா அவன் அப்பாவும் அம்மாவும் அவனைத் தேடி வந்துட்டாங்க. பையன் ரொம்ப சலிப்போட, அதுக்குள்ளே என்னப்பா அவசரம்? நீங்களும் ஒண்ணும் வாங்கித்தர மாட்டீங்க. நானா ஒரு ஐடியா பண்ணி காணாமப்போன மாதிரி நடிச்சேன். எனக்கும் வேண்டியது எல்லாம் கிடைச்சுது. வந்து கெடுத்திட்டீங்களேன்னு சொன்னான். இது எப்படி இருக்கு.

ஒரு பையன் தன் அப்பா அம்மாவோட கல்யாணப் போட்டோவை எடுத்து வச்சிகிட்டு அழுதான். "ஏன் என்னை விட்டுட்டு போட்டோ எடுத்தீங்க"ன்னு.

"பாம்புக்கு கால் உண்டா?"ன்னு வாத்தியார் கேட்டர், "உண்டு சார். இல்லேன்னா பம்புன்னு ஆயிடும்" என்பான். "பாம்பு படம் எடுக்குமான்னு ஆசிரியர் கேள்வி கேட்க "எடுக்கும் சார். ஆனா அது ரிலீஸ் மட்டும் ஆகாது" என்பான்.

சில நேரங்களில் கேள்வி கேட்கிறவங்களையே பசங்க சுத்தல்லே விட்டுருவாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25வது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம் குருநகர் தூய யாகப்பர் ஆலய தூய வின்சென்ற் டி போல் சபை பெண்கள் பந்தியினர் கடந்த 11.05.2014 அன்று தமது வெள்ளிவிழா நிகழ்வை மிகவும் சிறப்பாக முன்னெடுத்தனர். பந்தியின் தலைவி சகோதரி அஞ்சலா பேர்மினஸ் அவர்களின் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் நாவாந்துறை, றோ.க. வித்தியாலய அதிபர் திரு. F.X. அன்ரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் பேர்கன் - ஒஸ்லோ இணையத்தின் தலைவர் திரு. சி. சிலுவைதாசன் (J.P) அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் பந்தியின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி R.C.X நேசராஜா மத்திய சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி R.H. சகாயநாயகம் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி ப.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முழுமையாக பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட இப்பந்தி சவால்கள் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மிகவும் சிறப்பாக பங்கு மக்களுக்கு ஆற்றி வருகின்ற ஆன்மீக பிறரன்புப் பணிகளைப் பாராட்டி பலர் உரையாற்றி வாழ்த்தி நின்றனர்.

தேவையில் இருக்கின்ற மக்கள் அதிகமாக வாழுகின்ற இக்காலத்தில் இவ்வாறு பிறரன்புப் பணிகளை ஆற்றுகின்ற சபைகள் இன்னும் இன்னும் வளர வேண்டும் என்றும் இப் பணிகளினூடாக மனித மாண்புகள் பேணப்படவும் இறைமகன் இயேசுவின் சாட்சியாகவும் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினர். தொடர்ந்து மதிய போசனத்தோடு வெள்ளி விழா நிகழ்வு நிறைவு பெற்றது.

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப்பேருரை




புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலே இயங்கி வருகிற தமிழ்த்தூது தனிநாயகம் தமிழ் மன்றமானது, கடந்த 04.06.2014 அன்று தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரையை ஒழுங்கு செய் திருந்தது. மன்றக்காப்பாளர் அருட்பணி இ.பெ. தயாபரன் அடிகளாரின் வழி காட்டலின் கீழ் இம்முறை 11வது நினைவுப் பேருரை ஒழுங்குசெய்யப்பட்டது.

'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் கல்வி மற்றும் ஆராட்சிப் பங்களிப்பு' என்ற தலைப்பிலே பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள் பேருரை வழங்கினார். தனிநாயகம் அடிகளாரின் வாழ்வியல் பக்கங்களுக்குள்ளே நுழைந்து மிகச் சிறந்த மிக நேர்த்தியான ஓர் ஆய்வுத்தரமுடைய உரையை வழங்கியிருந்தார். 'குருக்கள், அருட்சகோதரர்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும பங்குபற்றிப் பயன்பெற்றனர். பேருரைக்குப் பின்னரான கலந்துரையாடலில் இன்றைய கல்விப்போக்கின் நடைமுறைச் சவால்கள் தொடர்பான பல வினாக்கள் எழுப்பப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

அருட்பணி. கலாநிதி அ.பி. ஜெயசேகரம் அடிகளார் அவையைத் தலைமை ஏற்று மிகச் சிறப்பாக நிகழ்வை முழு நிறைவு பெறச் செய்தார். ஓர் இனம் தொடர்ந்து தன் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள மொழி உயிர்ப்புடன் இருப்பது அவசியத்தேவை எனவும் இத்தகைய முயற்சிகள் அந்தத் தேவையை வலியுறுத்துவதில் சிறந்த பங்காற்றுவதாகவும் தமிழ் ஆர்வலர்கள் பலர் குறிப்பிட்டனர்.

# முத்தமிழ் விழாவும் நூல் வெளியீடும்



யா/புனித பத்திரிசியார் கல்லூரியின் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றம் நடாத்திய "முத்தமிழ் விழாவும் நூல் வெளியீடும்" அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் அ. அருண் ஜெனுசன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக பாஷையூர் நாட்டுக்கூத்துக் கலைஞான அண்ணாவியார் கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்கள் எழுதிய "பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா ஒளி" எனும் நாட்டுக்கூத்து நூல் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டது. நூலினை புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி. ம. ஜெறோ செல்வநாயகம் அடிகளார் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை யாழ் மறைமாவட்ட நிதிமுகாமையாளர் அருட்பணி. J.B. அன்ரனிதாஸ் அடிகளார் பெற்றுக் கொண்டார். நூலுக்கான அறிமுக உரையை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை ஆசிரியர் திரு. யோ. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் வழங்கினார்.

பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட அண்ணாவியார் கலாபூஷணம் அன்ரனி பாலதாஸ் அவர்களின் கலைப்பணியைப் பாராட்டி புனித பத்திரிசியார் கல்லூரி சமூகத்தினர் அவருக்கு "கலைத்தகழி" நாமம் சூட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

பாடசாலைமட்டத் தமிழ்த் தினப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை பிரதம விருந்தினரின் துணைவியார் திருமதி. செபஸ்ரியம்மா பாலதாஸ் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். மாணவர்களின் நாட்டார் இசை, நடன நிகழ்வுகளுடன் "பத்திரிசியார் ஏற்றிய பாஸ்கா ஒளி" நாட்டுக்கூத்து அரங்காற்றுகை சிறப்பு நிகழ்வாக இடம் பெற்றது. நன்றியுரையினை முத்தமிழ் மன்ற உப செயலாளர் செல்வன் அ. றொகான் டியோனி அவர்கள் நிகழ்த்தினார்.

# மிருசுவில், பழையவாய்க்கால்
# தூய வேளாங்கண்ணி ஆலய
# 25-வது ஆண்டு நிறைவு யூபிலி விழா

மிருசுவில் பழையவாய்க்காலில் அமைந்துள்ள தூய வேளாங்கண்ணி ஆலயத்தின் 25-வது ஆண்டு நிறைவு யூபிலி விழாவும், வருடாந்த திருவிழாவும் கடந்த மே மாதம் 31-ம் திகதி இடம் பெற்றது. இவ் ஆலயம் இவ்வருடம் வெள்ளி விழாவைக் கொண்டாடும் வகையில் மிருசுவில் பங்கின் அனைத்து ஆலயங்களில் இருந்தும் பெருமளவு மக்கள் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் மாலை 4.30 மணிக்கு ஒன்றுகூடி திருச்செபமாலைப் பக்தி முயற்சியை தியானித்தபடி பேரணியாக தூய வேளாங்கண்ணி ஆலயத்தை சென்றடைந்ததும் மாலை 6.00 மணிக்கு அருள் தந்தை மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் தலைமையில் ஐந்து குருக்கள் இணைந்து திருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் அன்னையின் திருச்சொருபப் பவனி இடம்பெற்று அன்னையின் ஆசீரும் வழங்கப்பட்டது.



மேற்படி ஆலயத்தின் திருவிழா, மற்றும் யூபிலி விழா ஒழுங்குகளை மிருசுவில் பங்குத்தந்தை அருள்திரு. அ. ஜெயரஞ்சன் அடிகளார் ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலயத் திருவிழாக் காலங்களில் மக்கள் விழிப்பாகச் செயற்படுங்கள் திருட்டுக்களைத் தவிர்க்க அறிவுறுத்துகின்றனர் பொலிஸார்

**கூடியவரை ஆலயங்களுக்கு அதிகமான நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்ப்பதோடு வீட்டில் ஒருவராவது இல்லாது எல்லோரும் ஒன்றாக வெளியேற வேண்டாம்**


யாழ் குடாநாட்டில் தினமும் பல்வேறு ஆலயங்களில் நவநாள் வழிபாடுகளும் ஆலய விழாக்களும் தேர்த்திருவிழாவும் நடைபெற்றுவருகின்றன. பெருமளவு மக்கள் திருவிழாக் காலங்களில் ஆலயங்களில் ஒன்று கூடியுள்ள வேளை இடம் பெறக் கூடிய திருட்டுச் சம்பவங்களைத் தவிர்த்துக் கொள்ள பொது மக்கள் விழிப்பாக இருக்குமாறு பொலிஸ் வட்டாரங்கள் அறிவுறுத்துகின்றன. சன நெருக்கடியைப் பயன்படுத்தி ஆண்கள், பெண்கள் என திருட்டில் ஈடுபடும் கும்பல்கள் தருணம் பார்த்திருந்து தமது கைவரிசையைக் காட்டக்கூடும்.

எனவே ஆலய விசேட திருவிழாக்களில் முண்டியடித்து வழிபாடுகளில் ஈடுபடும்போதும், அங்கு பரிமாறப்படும் உணவு வகைகளைப் பெற சனக் கூட்டத்துக்குள் செல்லும் போதும் தத்தமது தங்க நகைகளை அவதானித்து பத்திரப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கூடியவரை ஆலயங்களுக்கு அதிகமான நகைகளை அணிந்து செல்வதைத் தவிர்ப்பதோடு வீட்டில் ஒருவராவது இல்லாது எல்லோரும் ஒன்றாக வெளியேற வேண்டாமெனவும் அறிவுறுத்தப்படுகிறது.

குடாநாட்டில் களவு, கொள்ளை, வழிப்பறி என்பன நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதையொட்டி பொலிஸார் அதிரடிப் படையினருடன் இணைந்து விசேட ரோந்து சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகத்துக்கிடமான புதிய முகங்கள் தொடர்பில் பொது மக்கள் குறிப்பாக இளைஞர்கள் கண்ணோட்டமாக செயற்பட்டால் திருட்டு முயற்சிகளை தவிர்த்துக கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.


# குருத்துவ வெள்ளிவிழாவில் ஜெபிக்கின்றோம்



அருட்பணி
அமரர் M.X. கருணாரட்ணம்
(கிளி)

குருத்துவ அருட்பொழிவின் 25 ஆண்டுகள் நிறைவுறும் போது உங்கள் குருத்துவப் பணிக்காக ஆண்டவருக்கு நன்றி கூறுவதுடன் உங்கள் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற ஜெபிக்கின்றோம்.

பாதுகாவலன் சமூகம்.

# 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 28 . 09 . 1926



உதிர்வு 15 . 05 . 2014

அமரர் கிறகோரி சவிரிமுத்து

என்றும் எம்மை அரவணைத்து
அன்பாலும் பண்பாலும் இனிய
வாழ்வு தந்த பப்பா! உங்கள்
ஆன்மா சாந்தி அடைய
இறைவனிடம் வேண்டுகிறோம்.

உசன், மிருசுவில். Add - 40/14 பிள்ளைகள் குடும்பம்


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் [illegible] அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2014ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org